DECEMBER 2024 FB POSTINGS

This Issue of Dec 2024 is compilation of Pattabi's FB postings placed from dec 1-dec 31

Pattabi's FB Postings

FB Postings of Dec 2024

dec 3

When I did something to them

They said

They loved me

When I am doing nothing to them

Specially no harm to them

They ask

Who Is he

- Namari

dec 4

ஜனவரி 30 1948 காந்தியடிகள் கொலைசெய்யப்பட்ட நிகழ்வு இந்தியாவையும் உலகையும் உலுக்கியது. பாகிஸ்தானிலும் அதிர்வலைகள் பெருமளவு இருந்தன. காந்தியுடன் இருந்த சண்டையிட்ட ஏராள தலைவர்கள் பாகிஸ்தானிலும் தங்கள் புகழஞ்சலியை செய்தனர்.

பாகிஸ்தானின் தந்தையாக கொண்டாடப்பட்ட கவர்னர் ஜெனரல் ஜனாப் ஜின்னா அவர்கள் முதலில் தன் அஞ்சலியை அறிக்கை மூலம் செலுத்தினார். அதில் அவர் வழக்கமாக சொல்லி வந்த ‘இந்து தலைவர் காந்தி’ என்கிற சொற்றொடரையே பயன்படுத்தி இருந்தார்.

பின்னர் பாகிஸ்தான் அரசியல் அமைப்பு அசெம்பிளியிலும் அவர் தனது அஞ்சலி செய்தியை தந்தார். அதில் இந்து என்கிற பதத்தை தவிர்த்துவிட்டு தந்தார். பிப் 24 1948 ல் பாகிஸ்தான் அரசியல் அமைப்பு அசெம்பிளியில் பிரதமர் லியாகத்கான் உட்பட பலர் காந்தியின் மகத்தான சேவையை தெரிவித்து அஞ்சலி செலுத்தினர்.

ஜின்னாவின் முதல் மற்றும் பின்னரான அறிக்கையின் சில வரிகளை இங்கு தந்துள்ளேன்.

முதல் அறிக்கையில்

…Whatever our political differences, he was one of the greatest men produced by the Hindu community, and a leader who commanded their universal confidence and respect.

I wish to express my deep sorrow, and sincerely sympathise with the great Hindu community and his family in their bereavement at his momentous, historical and critical juncture so soon after the birth of freedom and freedom of Hindustan and Pakistan.

The loss to the Dominion of India is irreparable, and it will be very difficult to fill the vacuum created by passing away of such a great man at this moment.

ஜின்னாவிற்கு அப்போது உதவியாளர்களாக இருந்த சில பிரிட்டிஷ் அதிகாரிகள் ‘ a great leader of the world’ என்கிற சொற்றொடரை பயன்படுத்தலாமா எனக் கேட்டதற்கு, ஜின்னா அதை ஏற்கவில்லை.

இந்த அறிக்கையில் அவரின் வழக்கமான ஹிந்துஸ்தான் பதமும் , காந்தி இந்துக்களுக்கான தலைவர் மட்டுமே என அவரின் அங்கீகரிப்புமே தொழிற்பட்டிருக்கும்.

பிரிட்டிஷ் நாடாளுமன்றம் Indian Independence Act சட்டத்தில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் டொமீனியன்கள் என்ற பெயரையே குறிப்பிட்டிருந்தாலும், ஜின்னா அவர்கள் பெரும்பாலான தருணங்களில் ஹிந்துஸ்தான் என்பதை பயன்படுத்தி வந்தார். மேற்கண்ட அறிக்கையில் அவர் விடுதலை நாடுகள் எனக் குறிப்பிடும்போது ஹிந்துஸ்தான் பாகிஸ்தான் என்றும், டொமீனியன் என்றுசொல்லும்போது அதிகாரபூர்வ இந்தியா என்கிற பதத்தையும் பயன்படுத்தியிருப்பதை உணர்ந்தேன்.

பிப்ரவரி 24 1948ல் அசெம்பிளியில் ஜின்னா அவர்கள் குறிப்பிட்ட சில வரிகள்(பல தலைவர்கள் பேசிய பின்னர்)

I have heard the deep expression of sorrow and grief and I associate myself with the tributes that have been paid to this great man and his greatness. He died in the discharge of duty in which he was engaged. He was a man of principles and when he believed that it was his duty he took it up and performed it. His tragic death, however, much we deplore and condemn it, was a noble death for he died in the discharge of the duty in which he believed. I will convey the message as desired by you, Mr PM, to the Indian people in due course.

இந்த அறிக்கையில் tragic death என்றாலும் noble death in the discharge of the duty என ஜின்னா அவர்கள் புகழ் அஞ்சலி செய்வதைப் பார்க்கிறோம். Great man என சொல்லியிருப்பார்.

பாகிஸ்தான் பிரதமராக இருந்த லியாகத் அலி கான் அஞ்சலியில்

It is with deep sense of sorrow that I rise to make a reference to the tragic death of Gandhiji . He was one of the greatest men of our times..Thirty years ago, Gandhiji preached the doctrine of non violence and it is indeed an irony of fate that the man..should be victim of an assassin’s bullet.

As he was always anxious for communal harmony, he threw himself, heart and soul into this work of establishing communal harmony in India and everyone knows that even at the risk of his life, he carried his noble mission. The immediate cause of his tragic death was certainly his effort to re establish communal harmony in India

லியாகத் தன் அஞ்சலியில் சற்று தாராளமாகவே நடந்துள்ளதைக் காண்கிறோம்.

இந்தியாவில் காந்தி மீதான bias களில், காந்தி போனது இந்தியாவிற்கு நல்லதுதான், இந்திய மக்கள் சுயமாக யோசிப்பார்கள் எனப் பேசிய இன்றைய பெரும் பீட தலைவர்களும் உண்டு. பாகிஸ்தான் அசெம்பிளி சற்று தாரளாமாகவே நடந்துள்ளதைக் காணும்போது , சற்று ஆறுதல் தோன்றுகிறது.

Ref Jinnah His success and failures and Role in History ch 17 - Ishtiaq Ahmed

4-12-2024

dec 5

ஆகாஷ் சிங் ரதோர் பேராசிரியர், தத்துவயியலாளர், அம்பேத்கர் ஆய்வாளர். சில ஆண்டுகளுக்கு முன்னர் ரதோரின் அம்பேத்கரின் முகப்புரை ஆங்கில நூல் குறித்து விரிவான கட்டுரை ஒன்றை எழுதியிருந்தேன். ஜீவா நாவா சிந்தனை தோழர்கள் மத்தியில் விரிவான உரை ஒன்றை தந்த நினைவு இருக்கிறது. அந்த உரை பதிவாகவில்லை என நினைக்கிறேன். கட்டுரை என் வலைப்பக்கத்தில் இருக்கிறது.

ஆகாஷ் சிங்கின் நூல்கள் மிக ஆழமான தேடல்கள் கொண்டவையாக இருக்கும் . கடந்த 2023 ல் வெளிவந்த Becoming Babasaheb Birth to Mahad 1891-1929 புத்தகம் அம்பேத்கர் வாழ்வியல் இலக்கியத்திற்கு முக்கிய பங்களிப்பை செய்திடும் நூல்.

அம்பேத்கர் வாழ்வும் காலமும் என்கிற விரிவான உள்ளடகத்தின் முதல் வால்யூம், ரதோரின் இந்நூல். இரண்டாவது வால்யூம் வந்ததாக எனக்குத் தெரியவில்லை.

ஆகாஷ்சிங் ரதோரின் இந்நூலுடன் என் மனநிலையில் நெருக்கமாக செல்ல முடியும் என்றே தோன்றுகிறது. அம்பேத்கர் வாசிப்பில் எனக்கு தோன்றிய சில அம்சங்களுடன் ரதோர் ஒத்துப்போவதை என்னால் காணமுடிகிறது.

இதுவரை எழுதப்பட்ட அம்பேத்கர் வரலாறுகளில் ஒன்று hagiography அல்லது அவர் புலமைசார் விசாரிப்புகள் விதந்தோதல்கள், அரசியல் நிலைப்பாடுகள் என்ற கோட்டோவியத்திலேயே நிறுத்தப்பட்டதை ரதோரும் மிகத்தீவிரமாக உணர்கிறார். Intellectual or political Biography என்ற அளவில் அவை பொதுவாக நின்று போயின.

தனஞ்செய் கீர் உரிமை பாராட்டிக்கொண்ட அம்பேத்கர் அதிகாரபூர்வ வரலாறு குறித்து, எனது விமர்சனப் பார்வையை பல இடுகைகள் வழி முன்னர் செய்திருந்தேன். அந்நூல் சாவர்க்கர் துதிபாடல் என எழுதியிருந்தேன். ரதோர் அதே கருத்திற்கு தன் நூலில் வந்துள்ளார். சசி தரூர் எழுதியது பற்றி தனிக்கட்டுரை ஒன்றை எழுதியிருந்தேன். கயிர்மோடே மராத்தி வால்யூம்கள் ஆங்கிலத்தில் நமக்கு கிடைப்பதில்லை. எனவே அது குறித்து எனக்கு ஏதும் தெரியாது. அதில் உள்ள தவறுகள் குறித்தும், அம்பேத்கர் படித்த வெளிநாட்டு நிறுவனங்கள் தரும் கடிதம், செய்திகளில் உள்ள தவறு குறித்தும் ரதோர் பேசுகிறார்.

அம்பேத்கர் துணைவியார் டாக்டர் சவீதா எழுதிய நூல் மாறுபட்டு, அவரை இரத்தமும் தசையுமாக நடமாடிய நம் போன்ற ஆசாபாசங்கள் கொண்ட மனிதராக சித்தரித்ததை நான் வியந்து சொல்லியிருந்தேன். ரதோரும் சவீதா நூலை மாறுபட்ட நூல் என ஏற்கிறார். அவரை மனிதராக காட்டிய நூல் என ஏற்கிறார்.

நமக்கு கிடைக்கும் பெரிய மனிதர்களின் வரலாறெல்லாம், குறிப்பிட்ட ஒற்றைக்கூறை மய்யப்படுத்தி எழுதப்பட்டதாகவே அமையும். அசோகர் என்றால் கலிங்கப்போர் மனமாற்றம், அக்பர் எனில் தீன் இலாஹி, அவுரங்கசேப் எனில் ஜசியா வரி என ஒன்றை அடையாளப்படுத்தி வரலாறு சுற்றும்.

நம்மால் கொண்டாடப்படும் பெரிய மனிதர்கள் சுபாவம் , அன்றாட அனுசரிப்புகள் குறித்து ஏராள இடைவெளிகள் கொண்ட சரிதைகளே நமக்கு கிடைக்கும். அவர்கள் சிறு வயதில் எப்படி குடும்பத்தார்களுடன் இருந்தனர், குடும்பம் என்ன சொல்லி அவர்களை வளர்த்தது, கல்விக்காலத்தில் வாய்த்தவை, நண்பர்களுடன் உறவு, அக்கம் பக்க உறவுகள், அறிவு பெருக்கம், பொதுப்பணிகளில் அவர்களது ‘டெம்பரமெண்ட்’ , துணவி மகன் மகள் உற்றார் உறவினர் உறவுத்தன்மை, பணியாளர்களிடம் நடந்துகொள்வது, அமைப்பில் சக தோழர்களிடம் உறவு , பொது நிதிகளை கையாள்வது, சொத்து சுக அனுபவங்கள் , மன சாட்சியின் குரல் - நெஞ்சுக்கு நீதி என ஏராள கோணங்களில் பெரும் பீடங்களில் அமர்த்தப்படுபவர் வரலாறு தேவைப்படுகிறது . அவர்களை நடமாடிய மனிதர்களாக பார்த்து வாழ்க்கை எழுதப்படுதலும் பொது வெளியில் கிடைக்கப்பெறுதலும் வேண்டும். எம்மனிதரானாலும் அவர் குறித்த கொண்டாட்டங்களில் அப்போதுதான் கொஞ்சம் ‘ பாலன்ஸ்’ இருக்கும்.

ஒருவரின் இந்த எதார்த்த வாழ்வில் இடைவெளிகளும் , மூடப்படலும் , அரசியல் சௌகரியங்களும் கொண்ட வரலாறு எனில் அது ஆய்வுலகத்திற்கு கேடான பாதையாகவே அமையும். இதே நிலைதான் சமீப காலத்தில் வாழ்ந்து மறைந்த தலைவர்க்கும் என்றால், அது வரலாற்று அறிவுப்புலத்தின் பெரும் சோகம் என்றே எனக்குத் தோன்றும். அமைப்பை சார்ந்தவர் அரசியல் சார்ந்து வரலாறு எழுதுவதற்கும், உண்மைகளைத் தேடிப்போகும் ஆய்வாளர் எழுதுவதற்கும் வேறுபாடு இருக்க வேண்டாமா?

ரதோர் இந்த உணர்வின் தீவிரத்தில் தன் ஆய்வை கூர்மையாக்கி சொல்ல முயல்கிறார் என எண்ணலாம். அம்பேத்கர் தங்கிய இடங்கள்,

அவரது பிறந்த நாள் ஆண்டு பற்றிய பல்வேறு குறித்தல்கள் உட்பட விவாதிக்கிறார்.

இதுவரை எழுதப்பட்ட அம்பேத்கர் வரலாறுகளில் காணப்படும் factual error (அம்பேத்கர் எழுதிய waiting for visa உட்பட) குறித்து தன் கவலையை, அவற்றை நேராக்கும் நோக்கத்தை ரதோர் இந்நூலில் வெளிப்படுத்துகிறார். 15இயல்களில் 260 பக்கங்களில் இந்நூல் பின்னப்பட்டிருக்கிறது. ஹார்ப்பர் காலின்ஸ் ரூ 700ல் வெளியிட்டுள்ளனர். ஆர்வம் உள்ளவர் வாசிக்க உகந்த நூல்.

மேலும் தோன்றும்போது ரதோர் தரும் செய்திகளை எழுத வேண்டும் என்கிற நினைப்புடன்…

5-12-2024

dec 6

புகழ்வாய்ந்த வி ஆர் கிருஷ்ணய்யர் மதராஸ் பல்கலையில் பாபாசாகேப் அம்பேத்கர் குறித்து 4 உரைகள் தந்தார். அவை தொகுக்கப்பட்டு 1989ல் Social Democracy and Dalit Egalite என்ற அருமையான நூலாக வந்தது. கிருஷ்ணய்யர் முன்னுரையிலிருந்து சில வரிகளை இங்கு தந்துள்ளேன்.

A country is free not when it ceases to be a colony but when every member of its polity enjoys human dignity and equal opportunity. in that sense, our great country has miles to go and promises to keep and tryst to redeem. Why? The teeming millions, in their many have not dimensions, seek deliverance, social, economic and political, even to day.

The struggle for Independence was also a liberation movement of these tongueless masses at the lowest levels. there was one man who rose from among them, fought for their emancipation and emerged as the father of the Indian constitution. His name is Dr. Ambedkar, now no more on the terrestrial plane, who by his invisible yet militant presence moves the downtrodden Dalits into egalitarian action.

...Dr Ambedkar is the prophet of India's democratic future and egalitarian culture, of its ethos of samata and karuna..

The history of our country which lies ahead will be written as the story of a socialist republic only when the Ambedkar mandate of meaningful fraternity and dalit dignity becomes a reality

dec 7

இந்திய தொழிற்சங்க இயக்க அனுபவங்களில் உரமேறிய பல தலைவர்கள், நல்ல நூல்களை தந்துள்ளனர்.

தோழர் டாங்கே, ஏ பி பரதன் - AITUC

தோழர் பி டி ரணதிவே - CITU

தோழர் கார்னிக் - Royist

தோழர்/ திரு ஜி ராமானுஜம் - INTUC

தோழர்/ திரு டி பி தெங்காடி - BMS

மேற்கூறிய தலைவர்கள் அனைவருமே அவரவர் சார்ந்த கட்சி பின்புலம் அரசியல் பார்வையுடன் பல்வேறு கட்டுரைகளை எழுதியவர்கள். இவர்கள் அல்லாது , இந்திய தொழிற்சங்க இயக்க வரலாறு குறித்து எழுதப்பட்ட ஆய்வு நூல்களும் உள்ளன. அவை ஆய்வு நோக்க மாணவர்களுக்கு உதவும். தொழிற்சங்க கேடர்கள் எனில் மேற்கூறிய தலைவர்களின் நூல்களை பார்க்கலாம்.

மேற்கூறிய தலைவர்களுக்கான சிறப்பு அவர்களே தொழிற்சங்க இயக்கத்தை தலைமையேற்று அனுபவங்களை பெற்று அவரவர் சார்ந்த மத்திய தொழிற்சங்க இயக்கங்களை வழி நடத்தியவர்கள். இவர்கள் எல்லோரும் ஒரே மாதிரியான அனுபவங்களை வெளிப்படுத்தாமல் இருந்திருக்கலாம். ஒருவர் மீது மற்றவர் குறைகளை வெளிப்படுத்தியிருக்கலாம். ஆனால் அவரவர் தொழிற்சங்க இயக்கத்திற்கான classics யை கொடுத்தவர்கள். அவரவர் அரசியல் பார்வையையும் அவர்களது எழுத்தில் குழைத்து வைத்தவர்கள்.

இவர்களுடன் இருந்தோ அல்லது பார்த்தோ பல்வேறு துறைசார் தொழிற்சங்க இயக்கங்களிலும் அனுபவம் வாய்ந்த தலைவர்கள் இருந்தனர். வங்கி என்றால் பர்வானா, பிரபாத்கர், டெலிகாம் என்றால் ஓ பி குப்தா , ரயில்வே என்றால் புரோகித் , பாதுகாப்பில் எஸ் எம் பானர்ஜி என மத்தியதர வர்க்கம் சார்ந்த பணியாளர்களுக்கான classics and methodology யை இந்த தலைவர்கள் உருவாக்கித் தந்தனர்.

மேற்கூறிய தலைவர்கள் அனைவரும் தங்களின் இதழ்கள் வழியே ஏராளம் எழுதி சென்றுள்ளனர். அந்த அந்தக்காலத்திற்கான , அவர்கள் சவால்கள் என எண்ணியவற்றை, தொழிலாளர்களிடம் தங்கள் உரைகள், எழுத்துக்கள் வழியே கொண்டு சென்றனர்.

BTR அவர்களின் வால்யூம் ஒன்றை புரட்டியபோது , நினைவுகள் புரண்டன. அவரின் சொற்பொழிவுகள், கட்டுரைகள் (p&t தோழர்களுக்கு எனக் கூட ஒரு கட்டுரை) மூன்று வால்யூம்களாக தொகுத்திருந்தனர். மறைந்த மரியாதைக்குரிய W R வரதராஜன் , CITU செயலராக டெல்லியில் இருந்தபோது, தொலைபேசியில் என் தொழிற்சங்க மற்றும் அரசியல் அடையாளத்தை சொல்லி அனுப்ப முடியுமா எனக் கேட்டேன். நான் ஒரு முறை சொன்னேன் அவ்வளவுதான், நினைவூட்டல் என ஏதும் செய்யவில்லை.

சில நாட்கள் கழித்து மன்னை வழக்கறிஞர் தோழர் மார்க்ஸ் பேசினார். அப்போது மார்க்ஸ் சி ஐ டி யு மாவட்ட செயலர். டெல்லி சென்ற அவரிடம் தோழர் வரதராஜன் ரணதிவே அவர்களின் மூன்று வால்யூம்களையும் கொடுத்து அனுப்பிய செய்தியை தெரிவித்தார். வழக்கம் போல திருவாரூர் சி பி எம் அலுவலகத்தில் அவற்றை பெற்று தோழர் சேகர் (தோழர் ஜி வீரையன் அவர்களின் மருமகன்) என்னிடம் ஒப்படைத்தார். அந்த தோழர்களின் உதவிகளும் நினைவிற்கு வந்தன.

அவரவர் இயக்கம் சார்ந்த தலைவர்களின் எழுத்துக்களுடன், வேறு இயக்கம் சார்ந்த தலைவர்களின் எழுத்துக்களும் நம்மிடம் உள்ளே போகும்போது , இன்னும் விரிவான புரிதலுக்கான சாலை தென்படக்கூடும்.

தோழர் ரணதிவேவின் புகழ் வாய்ந்த எனக்கு பிடித்த செய்தி ‘தொழிலாளர்களை தொழிற்சங்கத்தில் விருந்தினராக்கிவிடாதே ‘. தோழர் டாங்கேவிடம் பிடித்த வாசகம் Militancy does not mean rudeness. குப்தா தந்த மிக முக்கிய செய்தி unity is nothing but toleration.

வாய்ப்புள்ளோர் இத்தலைவர்கள் எழுதிய சில நூல்களை தேடி படித்துப்பார்க்கலாம்.

7-12-2024

dec 8

மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு

மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டம் பிப்ரவரி 2006லிருந்து ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மிக பின்னடைந்த 200 மாவட்டங்களில் மன்மோகன் அரசால் முதலில் இத்திட்டம் தொடங்கப்பட்டது. பின்னர் 2008ல் முதலில் கூடுதலாக 130 மாவட்டங்களுக்கும் , பின்னர் நாடு முழுமைக்கும் நீட்டிக்கப்பட்டது.

நபர் நாட்கள்

2023 வரை ஏறத்தாழ 4300 கோடி மனித நாட்கள் (பெர்சன் டேஸ்), இச்சட்டப்படி பயன்படுத்தப்பட்டுள்ளது என்கின்றனர். ஆண்டிற்கு நூறு நாட்கள் வேலை தரவேண்டும். முடியவில்லை என்றால் வேலையின்மை படியை தரவேண்டும் என இச்சட்டம் சொல்கிறது.

கேட்க 4300 கோடி நாட்கள் பெரிதாக தோன்றலாம். இந்தியாவில் அன்றாட உழைப்பு சக்தி என்பது குறைந்தபட்சம் 80 கோடி மக்கள். அதாவது தினமும் 80 கோடி நபர் நாட்கள்- 8 மணிநேர கணக்கில். அரை நாள், குறை மணி உழைப்பு என எப்படி பார்த்தாலும் இந்த 80 கோடி நபர் நாட்கள் தினமும் இருக்கலாம். இப்படிப் பார்த்தால் 100 நாட்களுக்கு இவர்கள் அனைவரும் சேர்ந்து 8000 நபர் நாட்கள்/ ஆண்டொன்றுக்கு என வரும்.

ஊரக வேலை வாய்ப்பில் 10 கோடி உழைப்பாளர் வேலை பார்த்திருந்தால் அவர்கள் தினம் 10 கோடி நபர் நாட்களை தருகின்றனர். ஆண்டிற்கு 1000 கோடி (100 நாட்களில்) நபர் நாட்களை தருவர். இப்படி கணக்குப் பார்த்தால் அரசாங்கம் தருகிற கணக்குப்படி இத்திட்டம் 4 ஆண்டுகள் 1 மாதமே நபர் நாட்களை தந்துள்ளதா என்ற கேள்வி வரவேண்டும். திட்டம் வந்து 17 ஆண்டுகள் (2023ல்) ஆன நிலையில் , இந்த 10 கோடி உழைப்பாளரும் இந்த 17 ஆண்டுகளில் 17000 கோடி நபர் நாட்களை தந்திருக்க வேண்டுமே என்கிற கேள்வி வருகிறது.

ஊதியம்- விலைவாசி ஈடு

எவ்வேலைகள் என்பதை கிராம சபாக்கள் தான் திட்டமிடவேண்டும்- என்ன வேலை என்பதை சொல்லவேண்டும். ஒதுக்கப்படும் செலவில் 60 சதம் ஊதியம், 40 சதம் உபகரண செலவு எனப் பிரித்துள்ளனர்.. மூன்றில் ஒரு பங்காவது பெண் தொழிலாளர் இருந்திட வேண்டும்.

ஊதியப்பட்டுவாடா முறைப்படுத்த APBS (Aadhaar payment bridge system) என்கிற டிஜிட்டல் வழி செய்துள்ளனர். 14.30 கோடி தொழிலாளரில் 12.10 கோடி இவ்வாறு இணைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் சொல்கிறது. இந்த 14 கோடியை எடுத்து நாம் கணக்கிட்டால் நபர் நாட்கள் மேலும் கூடியிருக்க வேண்டும்.

பட்ஜெட்டில் ஆண்டுதோறும் எஸ்டிமேட் , திருத்தப்பட்ட மதிப்பீடு எனத்தருகின்றனர். முக்கியமான விடயம் எவ்வளவு நிதி கொடுக்கப்பட்டது என்கிற தகவல்தான்.

திட்டம் வந்த 2006-07ல் 8694.25 கோடி என்றால் , மன்மோகன் ஆட்சி வெளியேறிய 2013-14ல் 32994.12 கோடியை ரிலீஸ் செய்துள்ளனர். மோடி அவர்களின் 2014-15ல் 32977.43 கோடி என வெறும் 3 கோடியை கூட்டி நிதி கொடுத்துள்ளனர். பின்னர் அவரது ஆட்சியின் 2018-19ல் 61829.55 கோடியை வெளியிட்டனர். 2020-21 கொரானா காலத்தில் 111170.86 கோடி என பட்ஜெட் எஸ்டிமேட்டை விட 50 ஆயிரம் கோடி அவர்கள் கூடுதலாக தரவேண்டிய சமூக நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 21-22ல் 98467.85 கோடியையும், 2022-23ல் இதில் 8000 கோடியை குறைத்து 90810 கோடியை மோடி ஆட்சி ரிலீஸ் செய்தது. ஆண்டு செல்ல செல்ல பண மதிப்பு விலை உயர்வால் வீழும் என்பதையும் சேர்த்து புரிந்துகொள்ள வேண்டும்.

2023-24ல் மாநிலவாரியாக இதில் வேலைபார்க்கும் அன்ஸ்கில்ட் தொழிலாளர்க்கு நாள் ஊதியம் எவ்வளவு எனகிற பட்டியலை அரசாங்கம் வெளியிட்டுள்ளது. தென் மாநிலங்களை எடுத்தால் ஆந்திரா ரூ 272, கர்நாடகா 316, கேரளா 333, தமிழ்நாடு 294, தெலங்கானா 272, புதுச்சேரி 294 எனப் பார்க்கிறோம். குஜராத்தில் 256, மபியில் 221, ராஜஸ்தானில் 255, உபியில் 230, மேவ 237 என தெரிந்து கொள்கிறோம். ஏன் வெவ்வேறு மாநிலங்களில் வெவ்வேறு நாள் ஊதியம் எனக் கேட்டால், விலைவாசித் தன்மையால் மாறுகிறது என்கின்றனர்.

ஆண்டுதோறும் 'லேபர் ப்யூரோ' வெளியிடும் விவசாயத் தொழிலாளர் கணக்கீட்டின் படி ஈடு ஊதியம் மாற்றப்படுகிறது. சந்தையின் விலைவாசிக்கேற்ப ஈடு கணக்கீடு இல்லை என்பதை அரசாங்கம் எழுத்துபூர்வமாக ஏற்றுக்கொண்டும், இதில் நியாயம் வேண்டி ஏற்பாட்டை செய்யவில்லை என நாம் உணரமுடியும்.

மகேந்திர தேவ் கமிட்டி, டாக்டர் நாகேஷ் சிங் கமிட்டி பரிந்துரைகளை அரசாங்கமும் சொல்கிறார்கள். விலைவாசி ஈட்டிற்கான அடிப்படை

ஆண்டான 2010-11 மர்றும் அடிப்படை ரூ 100 என்பதை மாற்றாமல் , இதில் நியாயம் கிடைக்காது என்ற கருத்தும் நிலவுகிறது.

இமாச்சல், ஒரிஸ்ஸா, ஜார்கண்ட் போன்ற மாநிலங்கள் சொல்லப்பட்ட ஊதியத்துடன் தங்கள் பங்கை top up செய்து தருகிறார்கள். ஒரிஸ்ஸா 237 ஊதியம் என்றால் தன் பங்காக 115 போட்டு ரூ 352 வழங்குவது சிறப்பு. தமிழ் நாட்டில் இது இன்னும் (டாப் அப்) கோரிக்கையாகக்கூட எழவில்லை.

நிலுவை பிற குறைபாடுகள்

ஊதியம் நிலுவையாகி மிக காலதாமதம் ஆகிறது, உபகரண செலவும் காலத்தில் தரப்படுவதில்லை என்கிற புகார்களை அரசாங்கம் மறுக்கிறது. அவ்வளவாக இல்லை என பதில் சொல்கிறது. குஜராத்திற்கு நிலுவை இருப்பதில்லை. தமிழ்நாடு, உபிக்கு நிலுவை அதிகம் இருப்பதைக் காண்கிறோம். மேற்கு வங்கம் நிலுவை குறித்து வெளிப்படையாக விமர்சித்தது. FTO பண்ட் டிரான்ஸ்பர் ஆர்டர் திறன் 2022ல் 92 சதமெனில், 2023ல் 99 சதம் என்கிறது அரசு.

ஆதார் இணைப்பு ஊதியம் வழங்குதலிலும் ஏராள குறைகள்,-குறித்த நபருக்கு போகிறதா என்கிற புகார்கள் இல்லாமல் இல்லை. புகார்கள் இருந்தால் சரி செய்ய நடவடிக்கை என அரசு சொல்கின்றனர். எவ்வளவு புகார்கள் நிவர்த்தியாகிவுள்ளது என்கிற விவரம் இருந்தாலும், ஏன் புகார்கள் மிகக் குறைவாக உள்ளது எனத் தெரியவில்லை. மே 2023ல் அவர்கள் கொடுத்த விவரத்தில் 87 சதம் ஊதியம் சரியான கணக்கிற்கு சென்றதாக உறுதிபடுத்திகின்றனர் .

வேலையின்மை அலவன்ஸ் எவ்வளவு என்பதற்கு முதல் 30 நாட்கள் எனில் ஊதியத்தில் கால்பங்கு என்றும், தொடர்ந்தால் அரைப்பங்கு என்றும் தெரிவிக்கிறார்கள். தமிழ்நாட்டில் 2022-23ல் 7 பேர் மட்டுமே வேலையின்மை படியை பெற்றனர். கர்நாடாகாவில் 1077, ராஜஸ்தானில் 902 என அதிகம் இருப்பதைக் காண்கிறோம்.

வேலை முடிந்து 15 நாட்களில் ஊதியம் போடவில்லையெனில், ஈடாக ஒவ்வொரு நாளுக்கும் நிலுவையில் 5சதம் சேர்த்து தரப்படவேண்டும் என்கிறார்கள். தமிழ்நாட்டில் நிலுவை பிரச்சனை இல்லாமல் இருக்கிறது. ஆனால் கர்நாடகா, உபி, மராட்டியத்தில் அதிகம் இருப்பதைக் காண்கிறோம்.

குறைகளை தெரிவிக்க பஞ்சாயத்து மட்டத்தில் ரிஜிஸ்டர் இருக்க வேண்டும் என்பது உத்தரவு. ஆனால் பின்பற்ற விடுகிறார்களா எனத்

தெரியவில்லை. நாடு முழுக்க 2023ல் 2845 குறைகள்தான் வந்ததாக சொல்லும்போதே, அதன் லட்சணம் புரிந்து விடும். லஞ்சப் புகார்கள் 932 தானாம். போலி வேலை அட்டை என்கிற பிரச்சனையும் ஆங்காங்கே பேசப்படுகிறது.

இவைகளை கண்டறிந்து சொல்லக்கூடிய ஆடிட் CAG அறிக்கை 2013க்கு பின்னர் அதாவது மன்மோகன் ஆட்சிக்குப் பின்னர், மோடி ஆட்சியில் ஒருமுறைக் கூட நடைபெறவில்லை என்பது நல்ல நடைமுறையா என கேள்வி எழுந்து வருகிறது. ஆனால் மோடி அரசு சோசியல் ஆடிட் 2016ல் நடந்ததாக சொல்கின்றனர். சி ஏ ஜி ஆடிட் இருந்தால் , சில விவரங்கள் நமக்கு கிடைக்க வாய்ப்பிருக்கும்.

ஊரகத் தொழிலாளர் இத்திட்டத்தில் நிலவும் குறைகளை களைய 2024 டிசம்பர் 5,6 தேதிகளில் டெல்லியில் போராடினர்.

இந்திய ஊரக மக்களின் நம்பிக்கையாக இத்திட்டம் மேலும் செழுமைப் படுத்தப்படவேண்டும். ஓராண்டிற்கு அல்லது ஈராண்டிற்கு ஒருமுறை நாட்கள் 100க்கு மேல் – குறிப்பிட்ட சதம் குறைந்தது ஆண்டிற்கு என நாட்கள் உயர்த்தப்படவாவது வேண்டும். அதேபோல் தின ஊதியம் (ஆண்டு தோறும் அறிவிக்கப்பட்டாலும்), என்பதும் கூடுதலாக மாறுவதற்கு உரிய ஏற்பாடு வேண்டும். மாநில அரசாங்கங்களும் தங்களால் முடிந்த ’டாப் அப்’ செய்ய முடிந்தால், இத்தொழிலாளர் வாழ்வில் கொஞ்சம் முன்னேற்றம் வரலாம்.

8-12-2024

dec 9

ஆகாஷ் ரதோரின் ‘பாபாசாகேப் ஆதல்’ நூல் குறித்து முன்னர் சொல்லியிருந்தேன். நமது தோழர் கோவில்பட்டி ராட்டை ரகுவின் இணைய கட்டுரையான ‘அம்பேத்கர் குடும்பம்’ (மே 2016) என்பதையும் reference ஆக ரதோர் எடுத்து கையாண்டதை பார்க்க முடிந்தது. மகிழ்ச்சி.

ரதோர் , முன்னதாக வெளிவந்த இந்தியர்- வெளிநாட்டவர் என பலர் எழுதிய அம்பேத்கர் வாழ்க்கை வரலாற்று செய்திகளில் ஊர்ஜிதமாகாத செய்திகள் இருப்பதை, சில factual errors இருப்பதை சுட்டிக் காட்டுகிறார். ரதோர் 1929 வரை தான் எழுதியுள்ளார். அடுத்த வால்யூம் வந்தால்தான், ரதோர் நூல் குறித்து நாம் சரியாக உள்வாங்க முடியும்.

கடந்த சில நாட்களாக தமிழக நிகழ்வுகளில் பங்கேற்ற ஆனந்த் டெல்தும்டே புதிய ஆங்கில புத்தகத்தை , இன்னும் நான் படிக்கவில்லை. அதில் துல்லியம் மற்றும் இடைவெளிகள் எந்த அளவு நிரப்பப்பட்டுள்ளது என பார்க்க வேண்டும்.

பரோடா தீண்டாமை அனுசரிப்பு பாதிப்புகள்- நிபந்தனையை நிறைவேற்ற முடியாததால் அம்பேத்கருக்கு தொடர்ந்து நினைவூட்டப்பட்ட நிதி திரும்ப கட்டுதல் குறித்து ரதோர் மற்றவர்களைவிட கொஞ்சம் கூட பேசியுள்ளார். நிலுவை நிதியை எப்படி வட்டமேஜை மாநாட்டின்போது, பரோடா மன்னரிடம் பேசி பிரச்சனையை தீர்த்துக்கொண்டார் என்கிற செய்திவரை ரதோர் போகிறார். ஆனால் சமஸ்தானத்தில் வேலைக்கு இருந்த நாட்களில் தீண்டாமை அனுசரித்தவர் பற்றி அம்பேத்கர் வாய்மொழியாகவோ, எழுத்துபூர்வமாகவோ அரசிற்கு புகார் அளித்தாரா- அளித்திருந்தால் என்ன பதில் கிடைத்தது என்கிற பதில் இல்லா இடைவெளி ரதோர் நூலிலும் இருக்கிறது.

இந்த கேள்வியை டாக்டர் சவிதா அம்பேத்கர் எழுப்பிகொண்டாலும், அவர் நூலிலும் பதில் இல்லை. அம்பேத்கர் மன்னரை சந்தித்து தன் துன்பம் குறித்து பேசினாரா- பார்சி லாட்ஜ் அச்சுறுத்தல் குறித்து சொன்னாரா- ஒதுக்கப்படவேண்டிய அரசாங்க இல்லம் பற்றி தெரிவித்தாரா என , நான் பார்த்த நூல்களில் இடைவெளி இருப்பதை உணர்ந்தேன். ரதோரிடமும் பதில் கிடைக்காத இடைவெளியே.

ரதோர் இந்நூலில் முக்கிய ஒன்றை செய்துள்ளார். மூக்நாயக் பத்திரிகை வெளியானபோது, ஏன் இப்பத்திரிகை என்பதை விளக்கி

அம்பேத்கர் எழுதிய மராத்தி எழுத்தை ஆங்கிலத்தில் தந்துள்ளார். மார்க்சிற்கு மானிபெஸ்டோ , காந்திக்கு இந்திய சுயராஜ்யம் எப்படி seed text என என்னால் உணரமுடிந்ததோ, அப்படியான அம்பேத்கரின் 'விதை பிரதியாக' , மூக்நாயக் வருவது ஏன் என்கிற எழுத்தை உணர்கிறேன்.

மூக்நாயக் முதல் 6 மாதத்தில் 12 இதழ்கள் வந்தன. அதாவது இரண்டாவது நான்காவது சனி தோறும் வந்தது. அம்பேத்கர் அதன் நேரிடை எடிட்டராக இல்லை. பாண்டுரங் பட்கர் பின்னர் தின்யான் தியோ கோலப் இருந்தனர். கோலப் சவுத்பாரோ கமிஷன் தொடர்பாக அம்பேத்கருடன் உதவியாக நின்றவர். பின்னர் வேறுபாடுகள் வந்து அவர் மீது புகார்கள் எழுந்து 1923ல் கோலப் தொடர்புகள் நின்றன.

1920ல் முதல் மூக்நாயக் தலையங்கம் எழுதும்போது அம்பேத்கருக்கு வயது 29. தன் எதிர்கால வேலைக்கான தெளிவு , ஒருவகை மானிபெஸ்டோ என்றே அதை புரிந்துகொள்ளலாம். அத்தலையங்கம், அவரின் seed text என்கிற வகையில் பல மொழிகளில் போய் இருக்க வேண்டும். அதிலிருந்து சில வரிகளை (ரதோர் ஆங்கிலத்தில் தந்த படி) தருகிறேன்.

…The castes which constitute the so called Hindu Community are arranged in hierarchical order. Hindu society is like a tower , each floor of which is allotted to one caste..this tower has no staircase..no way of climbing up or down from one floor to another. The floor in which one is born is also the floor on which one dies. No matter how meritorious a person from a lower floor might be, there is no avenue for him to climb up to the upper floor. Likewise, there is no means by which a person entirely devoid of merit can be regarded to a floor beneath the one to which he has been assigned.

At the pinnacle of the caste hierarchy are Brahmins who regard themselves as the Gods of the earth..The Brahmins are convinced that they have earned their dues by their authorship of the sacred scriptures of the Hindus, notwithstanding the illiberal lessons which are preached thro these texts..

Right or wrong these Shastras have made an enormous impact on the minds of the innocent masses. That the masses are worshiping their enemies as Gods on earth…

Non Brahmins have remained backward due to lack of resources and education..Their only redemption lies in self emancipation from their chains of bondage, a process which has now happily begun.

..But education is costly Commodity and the untouchables because of their poverty, are unable to purchase it. Even few can afford, the stigma of untouchability is permanently attached to them..

The untouchables have also now realised… (for) genuine Swaraj

the untouchables must have a share in the country's political power, through their own independently chosen representatives…

The untouchables have now understood the tactics of caste Hindus who by gaining political power would surely use that power to perpetuate social inequality. This agitation of the untouchables against designs of caste Hindus is a sign of growing awakening among us…

2020ல் இந்த பிரதிக்கான நூற்றாண்டு வெளிப்பாடுகள் மராட்டிய பகுதிகளில் நடந்திருக்கலாம். எழுதப்பட்டு நூற்றாண்டு கடந்த இன்றைய அரசியல் சூழல், இந்த எழுத்தை பொருத்தமில்லாமல் செய்துவிட்டதா இல்லை அப்படியே பொருந்துகிறதா என்கிற விவாதம் தமிழகத்திலும், இந்தியாவின் பிற பகுதிகளிலும் எழுமா எனத் தெரியவில்லை. பார்க்கலாம்.

dec 10

ஜின்னா அவர்கள் குறித்து கொஞ்சம் கூடுதலாக பார்க்க எண்ணியபோது, 2020ல் வெளிவந்து, அப்போது படித்த எம் ஜே அக்பரின் Gandhi’s Hinduism The Struggle Against Jinnah’s Islam நூலை மறு வாசிப்பு செய்ய எடுத்தேன். அதில் கண்ட சுவையான உரையாடலை இங்கு தந்துள்ளேன்.

தென்னாப்பிரிக்கா வாழ் இந்தியர்க்கான தொடர் போராட்டங்களில், பிரச்சனைக்கான தற்காலிக உடன்பாடு ஒன்றை ஆட்சியாளர் ஸ்மட்ஸ் உடன் காந்தி ஜன 21 1914ல் கண்டார். காந்தி இதற்குப் பின்னர் டர்பனிலிருந்து ஜூலை 18 , 1914 அன்று இந்தியா புறப்பட்டார். அப்போது ஸ்மட்ஸ் உதிர்த்த வரி

அப்பாடா இந்த துறவி நம் எல்லையிலிருந்து கிளம்பிவிட்டார். நான் உளமார நம்புகிறேன், இது நிரந்தரமாக இருக்கும் என்று

The saint has left our shores, I sincerely hope for ever.

காந்தி தொடர்ந்து இந்தியாவில் மக்களிடையே வாழ்ந்து மகாத்மாவாகப் போகிறார் என ஒருவேளை அப்போது ஸ்மட்ஸ் அறியாமல் இருந்திருக்கலாம்.

ஸ்மட்ஸ் அவர்களும் இங்கிலாந்தின் சர்ச்சில் அவர்களும் நல்ல நண்பர்கள். இந்தியாவில் 1942 ‘ குவிட் இந்தியா’ போராட்டம் நடக்க இருந்த நேரத்தில், ஒரு நாள் இரு நண்பர்களும் சந்தித்தனர். சர்ச்சிலின் மருத்துவர் மாறன் பிரபு டைரி குறிப்பில் கிடைத்த செய்தியை இங்கு அக்பர் எழுதியுள்ளார்.

ஆகஸ்ட்7 1942ல் இருவரும் மதிய உணவுக்காக கூடினர். காந்தி குறித்த பேச்சு வந்தது. ஸ்மட்ஸ் சர்ச்சிலை எச்சரித்தார். காந்தியை குறைத்து மதிப்பிட வேண்டாம். அவர் கடவுளின் மனிதன். நாமெல்லாம் பூமியின் அன்றாட சுகவாசிகள். காந்தி சமய நல் நோக்கங்களை வைத்து பேசுகிறவர். நீங்கள் ஒரு போதும் அப்படியல்ல. அங்குதான் நீங்கள் தோல்வியுறுகிறீர்கள்.

சர்ச்சில் பதில் சொல்கிறார். நண்பர் ஸ்மட்ஸ் ஒன்று சொல்லட்டுமா. புனிதர் அகஸ்டினுக்கு பின்னரான காலத்தில் அவருக்கு அடுத்தபடியாக, அதிக பிஷப்களை உருவாக்கியவன் இந்த சர்ச்சில் என பெருமை பேசுகிறார்.

Smuts: Never underestimate Gandhi. He is a man of God. You and I are mundane people. Gandhi has appealed to the religious motives. You never have . That is where you have failed

காந்தி சர்ச்சில் குறித்து எழுதிய ஆர்தர் ஹெர்மன் சொன்ன வரிகளையும் அக்பர் சுட்டிக் காட்டுகிறார். காந்தியின் ஆன்மீக மேன்மையான புரிதலை - ஸ்மட்ஸ் உணர்ந்த அளவு சர்ச்சில் புரிந்துகொள்ளவில்லை. காந்தியின் உள்வட்ட தோழர்கள் கூட புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் அதற்கான முயற்சி கூட செய்யவில்லை. வேறு சிலரோ தலைமைக்கு கட்டுப்பாடு என்ற அளவில் பவ்வியமாக இருந்தனர். காந்தியின் ஆன்மீகத் தூய்மை என்பது பொருளாயத அம்சங்களிலோ, வரலாற்றில் வாழ்தல் என்பவற்றை எல்லாம் பொருட்டாக பார்த்ததில்லை.

இப்போதெல்லாம் நாம் பார்க்கும் ஜனநாயகம், கட்சித்தலைவர் எடுக்கும் முடிவிற்கு எதிர் கருத்து கூறினால் அக்கட்சியில் ஒருவர் இருக்க முடியாது . கட்சி கட்டுப்பாடு என நாம் அதை அமைப்புவிதி மூலம் வரையறுப்போம்.

நாட்டில் ஆட்சிக்கு எதிர் கருத்தை சொல்லாமல் இருந்தால், அங்கு அக்கட்சி எதிர்கட்சிக்கான இலக்கணத்தை இழந்துவிடும். எதிர்கட்சியாக பரந்த ஜனநாயகம் தேவைப்படும் என்பது உரிமைப்போராகும். அதேநேரத்தில் உட்கட்சி விவாதம் என்றால் அப்படியெல்லாம் விவாத கிளப் ஆக கட்சியை மாற்ற அனுமதிக்க முடியாது என்ற குரல்கள் வரும். தலைவர்க்கு கட்டுப்படு என்கிற உபதேசம் வரும். அடங்க மறு அத்து மீறு என சொல்லித் தந்தாலும் உள்ளுக்குள் கட்டுப்படு அல்லது வெளியேறு என்பதே தீர்வாக்கப்படும்.

அரசியல் அமைப்பு சட்டம் குடிமகனாக ஒருவருக்கு தரும் உரிமைகளை நிறுவனங்கள் - குடும்பம் , பள்ளி, அலுவலகம், தொழிற்சாலை, சாதி அமைப்புகள், மத அமைப்புகள், தொழில் அமைப்புகள், கட்சி அமைப்புகள் உள்ளுக்குள் சுருக்கிவிடுவதைக் காண்கிறோம். அதை வாலண்டரிசம் அல்லது சகித்து வாழ்தல் என்கிற சமாதானத்தில் மூடிவிடுகிறோம். அல்லது பெரிய கனவின் பெயரைச் சொல்லி கடந்து போகிறோம். ஒவ்வொருவரும் இந்த அனுபவத்தை கடந்தே வாழ்வதைப் பார்க்கிறோம். நம் வாழ்வில் நாம் எடுக்கும் இரட்டை நிலைப்பாடுகளே நம் சௌகரியங்களாகின்றன.

அரசியல் அமைப்பு சட்ட அடிப்படை உரிமைகளை காக்கவேண்டும் என எல்லா கட்சிகளும் அவரவர் கோணத்தில் போராட்டங்களை முன்னெடுப்பதைக் காண்கிறோம். இவர்கள் எவரின் முன்கால

வரலாற்றை பார்த்தால், அதாவது விடுதலையின் போது அரசமைப்பு விவாதம்- குடியரசாகும் போது, இந்த அரசமைப்பை கடுமையாக விமர்சித்து ஏற்க முடியாது என புறந்தள்ளிய அம்சங்களும் தூக்கலாகத் தெரியும். இன்றைய அரசியலின் பெரும் பரப்பை, அன்று அரசமைப்பை எதிர்த்து ஏற்காதவர்கள்தான், ஆளும் கட்சியாகவோ எதிர் கட்சியாகவோ இருந்துகொண்டு , அதை இன்று காப்பதாக சொல்லிக்கொள்ளும் முரணும் தெரிய வரும்.

சரி . அக்பர் அவர்களின் நூல் 450 பக்கங்களை கொண்ட 9 இயல்களால் அமைக்கப்பட்டுள்ள நூல். புளூம்ஸ்பரி 2020ல் ரூ 700க்கு போட்டிருந்தனர். ஆர்வம் உள்ளவர் வாசித்து பார்க்கலாம்

10-12-2024

dec 11

So wrote Dr Ambedkar in 1927

Human rights in public life cannot be established by someone issuing ordinance. It is inherent in every human being. Just because a right was not used or there was a gap in its usage, that does not mean that it ceases to exist.

It is a primary function of the Government to protect those exercising their rights from the unlawful opposition by others. Any Government failing to act always encouraged lawlessness

dec 11

பாரதியார் கட்டுரையிலிருந்து (சமூகம்)

பிராமணரல்லாதார் இயக்கம் குறித்து பாரதி பார்வையை கீழ்கண்ட அவரின் சில வரிகள் காட்டுகின்றன. ஒருவர் ஏற்க வேண்டும் என அவசியமில்லை. அதுவும் இன்றைய அரசியல் சூழலில் பாரதியின் அன்பர்கள் கூட ஏற்பார்களா எனத் தெரியவில்லை. அவர் இவ்வாறு அபிப்பிராயம் வைத்திருந்தார் என சுட்டும் வரிகள் அவை.. பாரதி வரிகள்

“இந்தியாவின் மற்றப் பகுதிகளைக் காட்டிலும் நமது சென்னை மாகாணத்தில்தான் ஜாதி பேதத்தைப் பற்றிய மனஸ்தாபங்கள் ராஜரீக விவகாரங்களிலுங்கூடப் புகுந்து தேச விடுதலையாகிய பாரம் தர்மத்துக்கே ஓர் இடுக்கண்ணாகக் கூடிய நிலைமை காணப்படுவதினின்று நன்கு விளங்கும்…

எந்த வகையாய் யோசித்த போதிலும், இந்த சென்னை மாகாணத்து ஜாதி பேதக் கிளர்ச்சியால் இந்தியாவின் விடுதலைக்கு தாமசம் ஏற்படுமென்று நினைக்க ஹேது இல்லை. இந்த பிராமணர் அல்லாதார் கிளர்ச்சி கால கதியில் மங்கி அழிந்துவிடுமென்று நிச்சயப்பதற்கும் போதிய காரணங்களிருக்கின்றன. முதலாவது இதில் உண்மையில்லை..

பெரும்பாலும் சர்க்கார் அதிகாரங்களையும் ஜில்லாபோர்டு தாலுகா முனிசிபாலிட்டி சட்டசபை முதலியவற்றில் கௌரவ ஸ்தானங்களையும் தாமே அடையவேண்டுமென்று ஆவலுடையவர்களே இக்கிளர்ச்சியின் தலைவராக வேலை செய்து வருகிறார்கள். திருஷ்டாந்தமாக பிராமணருக்கு அடுத்தபடி தென் இந்தியாவில் பல இடங்களில் சைவ வேளாளர் என்ற வகுப்பினருக்கு தலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த வகுப்புக்கு கீழே இரண்டாயிரம் சாதி வகுப்புகளிலிருக்கின்றன. அவர்களுக்கு மேலே பிராமணராகிய ஒரு வகுப்பினரே (சைவ வேளாருக்கு மேலே) இருக்கிறார்கள்.

இந்த நிலையில் நம்முடைய சைவ வேளாருக்குள்ளே இந்த அல்லாதார் கிளர்ச்சியில் சேர்ந்திருபவருங்கூட பிராமண பிரிவு குணமுடையோர் என்றும், மற்ற வகுப்புனருடன் சேர்ந்து கொண்டு மணம் புரிந்து வாழ மறுக்கிறார் என்றும் நிந்தித்திருக்கிறார்களேயல்லாது, தமக்கு கீழேயுள்ள இரண்டாயிரத்து சில்லரை ஜாதியர்களுடன் தாம் சேர்ந்து மணம் புரிந்து வாழுமாறு யாதொரு பிரயத்தனமும் செயாதிருக்கிறார்கள்.

பிராமணரல்லாதார் என்றொரு வகுப்பு இந்தியாவில் கிடையவே கிடையாது. ஒன்றோடொன்று சம்பந்தம் பந்தி போஜனம் செய்துகொள்ள வழக்கப்படுத்தாத ஆயிரக்கணக்கான வகுப்புகள் இந்துக்களுக்குள்ளே நெடுங்காலமாக இருந்து வருகின்றன. இவற்றுள் ஒரு வகுப்பினர் பிராமணர். இங்ஙனம் வகுப்புகளாகப் பிரிந்திருத்தல் குற்றமாயின் அக்குற்றம் பிராமணரை மாத்திரமே சார்ந்ததாகாது. எல்லா வகுப்பினரையும் சாரும்.

பிராமணருக்குள்ளேயே பரஸ்பரம் சம்பந்தம் சமபந்தி போஜனம் செய்துகொள்ளாத பிரிவுகள் பல பிரிவுகள் இருக்கின்றன. பிராமணரல்லாதார் என்ற வகுப்பே கிடையாது, அதுவே பொய். எனவே இந்தக் கிளர்ச்சியின் மூலமே பொய்யாக இருப்பது கொண்டு இதனை உண்மையில்லாத கிளர்ச்சி என்கிறேன்.

…ஸ்வராஜ்யம் கிடைத்தால் சட்டசபைகளில் எல்லா ஜாதி மேதாவிகளும் கலந்திருப்பார்களாதலால் அந்த சபைகளின் மூலமாக இந்தியாவில் முதலாவதாக ராஜரீக வாழ்வில் சமத்துவக் கொள்கையை நிறுத்திவிடலாம். பிறகு சமூக வாழ்விலும் அக்கொள்கை தானே பரவிவிடும். இதை விட்டு பொய்யும் புனையுமாகத் திராவிடர்களென்றும் ஆரியரென்றுமுள்ள பழைய சொற்களுக்கு புதிய அபாண்டமான அர்த்தங்கள் கற்பித்துக்கொண்டு வீண் சண்டைகள் வளர்ப்பதினால் ஹிந்து சமூகத்துக்கே கெடுதி விளையக் கூடும்- எந்த வகுப்புக்கும் அனுகூலம் ஏற்படாது”

11-12-2024

dec 12

தந்தை பெரியார் வைக்கம் நூற்றாண்டு கொண்டாட்ட விளம்பர செய்தியை முன் பக்கத்திலேயே இந்து ஆங்கில நாளிதழ் கொடுத்துள்ளது. விழா சிறக்க நல்வாழ்த்துகள். தமிழ்நாடு மற்றும் கேரள முதல்வர்கள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இந்து நாளிதழின் நடுப்பக்கத்திலும் மனுராஜ் அவர்கள் எழுதிய Vaikom Two States Two Leaders and a Tale of Reform என்கிற கட்டுரையும் வந்துள்ளது. இரு மாநிலங்கள் தமிழ்நாடு கேரளா- இரு தலைவர்கள் பெரியார் அம்பேத்கர். பின்னால் தொடர்ந்து உருவாக்கப்பட்ட சீர்திருத்தங்கள் போராட்டங்கள் இக்கட்டுரையில் பேசப்பட்டுள்ளன. பெரியார் அம்பேத்கர் பங்களிப்பை மனுராஜ் நன்றாகவே சொல்லியுள்ளார்.

காந்தி தொடர்ந்து காணடிக்கப்படுகிறார் என்கிற வருத்தம் மேலிடுகிறது. கடந்த 2023ல் கேரளா அரசாங்கத்தின் Public Relations Department ஓர் ஆவணத்தை vaikom Satyagraha Dawn of a New Era எனக் கொணர்ந்தது. அதில் காந்தி ,நாராயணகுரு பெரியார் , ஜோசப், மகாதேவன், கேசவப்பிள்ளை உள்ளிட்ட வைக்கம் இயக்க முன்னோடிகள் பலரின் படங்களின் கொலாஜ் உடன் அந்த ஆவணத்தை வெளியிட்டனர். இந்த ஆவணம் பேரா கார்த்திகேய நாயர் ஆய்வில் கொணரப்பட்ட ஒன்று.

கேரளா பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் கேசவமேனன் முதலில் மூன்று சத்தியாகிரகிகளை தேர்வு செய்து அனுப்புகிறார். குஞ்சப்பா என்கிற புலையர் சமூகம், பகுலேயன் ஈழவர், கோவிந்த பணிக்கர் நாயர். மூவரும் தடுக்கப்பட்டு கைது செய்யப்படுகின்றனர். முதல் மூன்று சத்தியாகிரகிகள் இவர்கள் என இந்த ஆவணம் சொல்கிறது. இதன் பின்னர் தேசிய அளவு கவனத்தை இப்போராட்டம் ஈர்த்தது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி சத்தியாகிரக நிதியாக மாதம் ரூ 1000 என அறிவித்து தரலானது.

இந்த ஆவணத்தின் 18 ஆம் பக்கத்தில் இடம் பெற்ற செய்தி

In addition to Mahatma Gandhi , individuals such as S. Srinivasa Iyengar, Swami Sharadananda, C Rajagopalachari, C R Das , E V Ramasamy Naicker and C F Andrews visited Vaikom at various times to express their solidarity with the satyagraha.

பெரியார் நுழைவு எனத் தனியாக பக் 25-26ல் முழுமையாக சொல்லியுள்ளனர். வைக்கம் வீரர் எனப் புகழ் பெற்றதை சொல்கின்றனர். ஏப்ரல் 12 1924ல் பெரியார் வைக்கம் வந்தது,

மதுரதாஸ், நாராயணசாமி, அய்யாமுத்து என பலருடன் பேசப்பட்டுள்ளது. பெரியார் கைது சிறை, அய்யாமுத்து கைது சொல்லப்பட்டுள்ளது. தமிழகத்தில் எழுந்த ஆதரவு எழுச்சிகள் நன்றியுடன் பதிவிடப்பட்டுள்ளது.

காந்தி வருகை, மகாராணி உட்பட பலருடன் விவாதித்தல் என தொடர்ந்து, 603 நாட்கள் போராட்டம் முடிவிற்கு வந்ததை சொல்கின்றனர். இந்த சிறிய ஆவணத்தின் இறுதிப் பகுதியில் நாராயண குரு செய்தி, பெரியார் படத்துடன் அவரது செய்தி வெளியிடப்பட்டுள்ளதைக் காணலாம்.

சரி. டாக்டர் அம்பேத்கர் என்ன எழுதினார் என பார்க்கக் கிடைத்தது. ஆகாஷ் ரதோரின் நூல் அவரின் செய்தியை நமக்குத் தருகிறது. எலியனார் ஜெனித்தும் தந்துள்ளார். வைக்கம் பற்றி அம்பேத்கர் வரிகள்

For us, the most important event in the country is the satyagraha at Vaikom…

Before Mahatma Gandhi , no politician in this country maintained that it is necessary to remove social injustice here in order to do away with tension and conflict , and that every Indian should consider it his sacred duty to do so.

மேலும் அம்பேத்கர் எழுதுகிறார். காந்தி கதரையும், இந்து முஸ்லீம் ஒற்றுமையையும் வலியுறுத்திய அளவு அவர் தீண்டாமை எதிர்ப்பை செய்யவில்லை. காங்கிரஸ் உறுப்பினர் ஆக தீண்டாமை ஒழிப்பு என்பதை ஏற்றல் என அவர் நிபந்தனையாக்கவில்லை. ஆனால் அதேநேரத்தில் காந்தியின் அனுதாபமும் முக்கியமானதுதான்- குறைத்து மதிப்பிட முடியாததுதான் .

நிபானி என்ற ஊரில் 1924 ல் நடந்த தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில் தான் அம்பேத்கர் வைக்கம் பற்றியும் காந்தி குறித்தும் மேற்கண்டவாறு பேசினார்.

9 hrs 12-12-2024

dec16

வியாக்கியான கேந்திரா

உண்மையைத் தேடுகிறோம் என்ற பெயரில் நாம் தேடி அடைவதெல்லாம் வியாக்கியானங்களே (Interpretations). உவப்பளிக்கும் ஒத்துப்போகும் வியாக்கியானங்கள், விலக்க விரும்பி விமர்சிக்கும் வியாக்கியானங்கள் என ஏதோ ஒரு வியாக்கியான புரத்தில் நாம் வசிக்கலானோம்.

மனிதன் தான் ஏற்படுத்தி வைத்திருக்கும் அனைத்துவகை நிறுவனங்களும் ஒரு வகையில் வியாக்கியான கேந்திரங்களே. வீடு, தெரு, குழாம், கல்விக்கூடம், வேலைத்தளம், சாதி, மதம், அமைப்புகள், கட்சி, ஆட்சி அதிகாரம், மருத்துவ மனை, நீதி மன்றம் இன்னும் எவ்வளவோ அவ்வளவும் வியாக்கியான கேந்திரங்களே.

மனிதன் பேசுவது எழுதுவது - கலை இலக்கியம், அரசியல் கோட்பாடுகள், தத்துவம், அறிவியல் , மத போதனைகள்- புனித நூல்கள் அனைத்துமே மனிதனின் வியாக்கியானங்களாகவே படுகின்றன. இவை எதன் பெயரில் கொண்டாடப்படும் மேடைகளும் வியாக்கியான விரிவுகளாகவே படுகிறது.

மனிதன் சமத்துமவற்றவன் எனச் சொல்லி தன்னை உயர்வாக எண்ணுகிறவனும் இருக்கிறான். நான் சமத்துவம் பேசுகிறேன், எனவே என்னை விட உயர்ந்தவன் எவன் எனக் கேட்பவனும் இருக்கிறான். பிச்சை புகினும் கற்கை நன்றே என்றான். கற்றது நான் போட்ட பிச்சை என்றும் இடித்துக் காட்டுகிறான்.

மனிதனை உய்விக்க இறுதி கோட்பாடு இதுவே என உரத்து பேசுகிறான். பத்தலை இன்னும் இன்னும் என வலிமையை கூட்ட விழைகிறான். நிலைப்படுத்திக்கொள்ள தன் வியாக்கியானங்களை பல்கி பெருக்கி எங்கும் அடையாளமாக்க முயற்சிக்கிறான். எதிரியை வியாக்கியானப்படுத்தி தன் சாகாமையை உறுதி செய்து கொள்கிறான்.

அடங்க மறு எனச் சொல்லிக்கொடுப்பவரிடம் அடங்க மறுப்பவன் முளைக்கிறான். சுதந்திரம் வாங்கித் தந்தவன் என சொல்லப்படுகிறவனிடமிருந்து விடுதலை எப்போது எனத் தவிக்கிறான். அதிகாரத்தை எதிர்ப்பவனின் அதிகாரம் கண்ணாடி முன் நின்றுகொண்டேயிருக்கிறது.

வியாக்கியானங்கள் ‘தன் குடையின் கீழ் உலகம்’ நோக்கியே பயணிக்க விழைகிறது.

ஒரே ஆறுதல் மனிதன் தன் வியாக்கியானத்தில் இன்னும் இறுதி வரியை எழுதிக்கொள்ளவில்லை. வியாக்கியானங்கள் முடிவதில்லை..

16-12-2024

dec17

Dec 17 Pensioners Day wishes to all their Health

For BSNL absorbed, thanks to com O P Gupta and those stood with him for the combined Pension as per Govt formula from the Govt Kitty. Thanks to then Govt and senior Officers of DOPPw and DOT for accepting Govt pension to the PSU BSNL retirees.

A great contribution to the Indian workers' movement by Telecom unions NFTE and FNTo and the supporters of that day .

Hope to get the due pension revision.

Wishes

R. Pattabiraman

dec17

நாடாளுமன்ற அவைகளில் இந்திய அரசமைப்பு 75 ஆண்டுகள் விவாதம் நடந்து முடிந்துள்ளது. 1946-49 கால அரசமைப்பு அவையில் பங்கேற்ற 15 பெண் உறுப்பினர்கள் குறித்த தொகுப்பு ஒன்றை நூலாக archive இணையத்தில் ஏற்றினேன். முழுமையாக ஆங்கில குறிப்புகள் கொண்ட தொகுப்பது. ஆர்வமுள்ளவர் பார்க்கலாம். தமிழில் அதற்கு முன்னுரை எழுதினேன். நூலின் பெயரையும் முன்னுரையையும் கீழே தந்துள்ளேன்

Founding Mothers Of Indian Republic

women Members of Constituent Assembly

முன்னுரை

இந்திய நாடாளுமன்ற மக்களவை 2024 டிசம்பர் 13, 14 இரு நாட்களில் 'இந்திய அரசமைப்பு சிறப்பின் 75 ஆண்டுகள்' விவாதம் ஒன்றை நடத்தியது. சில மணி நேரம் விவாதத்தை கவனிக்க முடிந்தது. பேசிய அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் பாபசாகேப் அம்பேத்கரின் மகத்தான பங்களிப்பை பேசினர். இன்னும் கூடப்போய் அம்பேத்கர் நினைவை எவர் போற்றுகிறோம், அவர் உழைப்பால் உருவான அரசியல் அமைப்பு சட்டத்தை எவர் உயர்த்திப்பிடிக்கிறோம், எவர் பாழ்படுத்தினோம்- பாழ்படுத்திக்கொண்டிருக்கிறோம் என்கிற பேச்சுப்போட்டியும் இருந்தது. அவரவர் அரசியல் கணக்கு தேவை அடிப்படையில் உரையை பொதுவாக அமர்த்திக்கொண்டதையும் காணமுடிந்தது.

மறைந்த ஆந்திரா தலைவர் என் டி ராமாராவ் அவர்களின் மகள் திருமதி புரந்தேஸ்வரி தன் உரையில் சற்று மாற்றாக, அரசமைப்பு உருவாக்கத்தில் பெரும் பங்காற்றிய மகளிர் குறித்து பேசியது என் மனதில் சென்றது. அப்படி ஒப்பற்ற பங்களிப்பை செய்த 15 மகளிரை அவர் Founding Mothers Of Indian Republic என அழைத்து பெருமை செய்தார். இத்தலைப்பை அவர் வேறு இடத்திலிருந்து பெற்றதை நான் கண்ணுற்றேன்.

இந்திய அரசமைப்பு அவையில் இருந்த தாட்சாயினி வேலாயுதம் பெயரில் பெண்ணிய குழு ஒன்று இணையம் ஒன்றை நடத்தி வருகின்றனர். அவர்களது இணையத்தில் அவையிலிருந்து செயல்பட்ட அந்த 15 தாய்மார்கள் குறித்து தனித்தனியாக செய்தி தொகுப்பை

வைத்துள்ளனர். அது மட்டுமல்லாமல் பாலின சமத்துவ போராட்டத்திற்கான சட்டப் போராட்டங்கள், நீதிமன்ற தீர்ப்புகள், உச்சநீதிமன்ற பெண் ஆளுமைகள் என பல அம்சங்களை தங்களது இணையத்தில் வைத்து டிஜிட்டல் சேவை செய்து வருகின்றனர். தாட்சாயிணி குறித்து சில ஆண்டுகளுக்கு முன்னர் என் வலைப்பூவில் அறிமுக கட்டுரை ஒன்றை எழுதியிருந்தேன்.

இந்த இணையம் தனித்தனியாக கொடுத்துள்ள விவரக்குறிப்புகளை இணைத்து ஒரே நூலாக- மின் புத்தகமாக மாற்றி பொதுவெளியில் வைத்தால் என்ன என்ற சிந்தனை தூண்டி, அதற்கான சிறிய உழைப்பை கொடுத்துள்ளேன். இங்கு நான் செய்திருப்பது dvda மின்கிடங்கில் தனித்தனியாக இருந்தவற்றை ஒருசேர தொகுத்து ஒரே இடத்தில் மின் புத்தகமாக மாற்றிக் கொடுத்தது மட்டுமே. ஒன்றாக சேர்த்து பார்க்கும்போது, இப்பெரு மக்களின் தனித்த பங்களிப்பை உணரமுடியும். அரசமைப்பு சட்ட உருவாக்க தந்தை என நாம் அறிவோம். அரசமைப்பு உருவாக்க கட்டுமான தந்தையர் Founding Fathers எனப் பேசப்பட்டதை நாம் உணர்ந்திருக்கலாம். Founding Mothers எனப் பேசப்படவேண்டிய 15 தாய் ஆளுமைகள் குறித்த குறிப்பு தொகுப்பாக இதைப் பார்க்கலாம்.

அரசமைப்பு உருவாக்கத்தில் அம்பேத்கர் பங்களிப்பு ஏராளம் பேசப்பட்டுள்ளது. அப்படி பேசப்பட்டதும் – பேசப்படவேண்டியதும் சரியானவையே. அதேபோல் நேரு கமிட்டி- கராச்சி தீர்மானம்- நேருவின் நோக்கத் தீர்மானம் போன்றவை ஓரளவிற்கு பேசப்பட்டுள்ளன. நான் பார்த்த அளவில் 'அரசமைப்பும் நேருவும்' என புத்தகம் ஒன்று வந்துள்ளதே தவிர விரிவான ஆய்வுகள் இல்லை. மூல நகலை உருவாக்கிய பின் என் ராவ் குறித்து கொஞ்சம் பேசப்பட்டுள்ளது. படேல் பங்களிப்பு கூட அங்கொன்றும் இங்கொன்றுமாக பேசப்பட்டுள்ளது. கோபால்சாமி அய்யங்கார் , அல்லாடி போன்றவர் உரைகள் சிறிய அளவு தனி நூல் ஒன்றில் கிடைக்கின்றன. அரசமைப்பு சட்ட உருவாக்கம் - அரசியல் அமைப்பு சட்ட சிறப்புகள் குறித்து ஏராள நூல்கள் வந்துள்ளன. மேலும் வரக்கூடும்.

7000 பக்க அளவில் அரசமைப்பு சட்ட அசெம்பிளி விவாதம் பல வால்யூம்களாக, நாள் அடிப்படையில் முழுமையாக இணையத்தில் கிடைக்காமல் இல்லை. எவர் யார் என்ற விவரம் கூட கிடைக்கும். ஆனால் உறுப்பினர்கள் பங்கென்ன, எதில் எப்படி கருத்தை ஒருவர் வெளிப்படுத்தினார் என , சில முக்கிய ஆளுமைகள் பற்றிய தனித்

தொகுப்பு என ஏதுமில்லை. நேரு , படேல் போன்றவர்க்கு கூட எங்கெல்லாம். எப்போதெல்லாம் தலையிட்டு என்ன பங்களிப்பு செய்தனர் என தனித்த நபர்வாரியான தொகுப்பு இல்லை.

காங்கிரசின் 50 ஆண்டுகளுக்கு மேலான நேரு முதல்- மன்மோகன் சிங் வரையிலான ஆட்சி இதை செய்யத்தவறி விட்டதாக தோன்றுகிறது. பின் வந்த பாஜக ஆட்சியும் இதற்கான முனைப்பைக் காட்டவில்லை. தமிழ்நாட்டிலும் , 'அரசமைப்பு அவையில் தமிழர் பங்களிப்பு' என எந்த தொகுப்பும் வரவில்லை. 75 ஆண்டுகால தமிழக முதல்வர்கள் ராஜாஜி காமராஜ் பக்தவச்சலமானாலும், தொடர்ந்த திராவிட முதல்வர்கள் அண்ணா, கருணாநிதி, எம் ஜி ஆர், ஜெயலலிதா, எடப்பாடி, ஸ்டாலின் வரை இது குறித்து முனைப்பைக் காட்டியதாக உணரமுடியவில்லை.

ஆனால் இங்கு 15 தாய்மார்களின் அரசமைப்பு விவாத பங்களிப்பை பெரும் கிடங்கிலிருந்து தேடி நமக்கு டிவிடிஏ தாட்சாயினி மின்கிடங்கு குழுவினர் அளித்துள்ளனர். அதை ஒருசேர தொகுத்து தரும் சிறிய வேலை மன நிறைவைத் தருகிறது. தொகுப்பு முழுமையாக ஆங்கிலத்தில் இருக்கிறது. தமிழ் மொழி பெயர்ப்பாளர் கண்ணுக்கு அகப்பட்டு அவர்கள் கைப்பட்டு தமிழில் வரும் எனில் இன்னும் கூடுதலான வாசிப்பாளருக்கு இத்தொகுப்பு போய் சேரலாம்.

இந்த 15 தாய்மார்கள் குறித்து சமீபத்தில் ஆஞ்சலிகா மற்றும் சத்யாவாலி என இருவரின் ஆய்வில் ஆங்கில நூல் ஒன்றும் வந்துள்ளது பாராட்டிற்குரியது.

Hope we can cherish the legacy of our Founding Mothers of Indian Republic

15-12-2024 - ஆர். பட்டாபிராமன்

dec 17

பேராசிரியர் வி இராமசாமி மறைந்த செய்தியை வங்கித் தலைவர் ரகுபதி சற்று முன்னர் தெரிவித்தார். அஞ்சல் இயக்கத் தலைவர் தோழர் தர்மதாஸ் செய்தி அனுப்பியிருந்தார்.

நாங்கள் இளைஞர்களாக தொழிற்சங்க இயக்கப் பணிகளில் வலம் வந்தபோது மூத்தவராக, திரு வி க கல்லூரி ஆங்கிலத்துறை பேராசிரியராக திருவாரூரில் உற்ற தோழராக இருந்தவர் தோழர் வி ஆர். தோழர்கள் வி ஆர், வேதையன், அ பா பாலையன், நித்தியானந்தம் என்கிற மூத்தவர்கள் , எங்களின் எல்லை மீறல்களுக்கெல்லாம் நிதானப்படுத்தக்கூடியவர்களாக, அரணாக நின்றவர்கள்.

பேரா தோழர் வி ஆர், பேரா பிறை போன்ற கல்லூரியின் மூத்தவர்கள் தங்கள் நிலை கெளரவம் ஏதும் பார்க்காது, அனைத்து போராட்டங்களிலும் 1970 களின் இறுதியிலிருந்து நின்றவர்கள். கல்லூரி மாணவர்களை சக தோழர்களாக உற்சாகப்படுத்தியவர் தோழர் வி ஆர். மறைந்த தோழர் தா. பாண்டியனுக்கு மிக நெருக்கமாக இருந்த தோழர்களில் ஒருவர். கல்லூரிக்கு அழைத்து பேச வைத்தவர். என் போன்றவர்களையும் கல்லூரி மாணவர்கள் மத்தியில் தொடர்ந்து பேச வைத்தவர் வி ஆர்.

நியு ஏஜ் இதழில் ஹிரன் முகர்ஜி, பருக்கி போன்றவர்களின் கட்டுரைகளின் நுண்ணிய அரசியலை சிலாகித்து பேசுவார் வி ஆர். ஹிரனின் ஆங்கில புலமையை வியந்து சொல்வார். பார்ட்டி லைப் கட்டுரைகள் குறித்தும் விவாதிப்பார். நகரில் இடது , திராவிட, அம்பேத்கரிய இயக்கங்களுடன் நல்ல தோழமையை வி ஆர் வைத்திருந்தார்.

கல்லூரி நூலகத்தில் ஏராள இடதுசாரி, திராவிட இயக்க நூல்களை இருவரும் கொண்டு சேர்த்தனர். செகுவாரா 1980லேயே கல்லூரிக்கு வந்துவிட்டார். டெரி ஈகிள்டனை தமிழகத்தில் பலர் அறியும் முன்னர் என் போன்றவர்க்கு தோழர் வி ஆர் அறிமுகம் செய்து, நூல்களையும் படிக்க வைத்தார்.

திருவாரூர் தொழிற்சங்க கூட்டமைப்பு, கலை இலக்கிய அமைப்புகள், நுகர்வோர் பேரவை என்பதையும் விஞ்சி, சமூகவியல் பேரவை என சென்னை போன்ற பெரு நகர்களில் மட்டுமே அன்று இருந்த விவாத அமைப்பை தொடங்கி அதற்கு செயலராக பேரா வி ஆர் செயல்பட்டார். பல அறிஞர்களை பேச வைத்தார். வி ஆர் திருச்சி சென்றவுடன், பேரா

தோழர் கௌதமன் செயலராக அந்த அமைப்பை தொடர்ந்து நடத்தினார்.

பொதுத்துறைகளை விரிவுபடுத்து ஜனநாயகப்படுத்து என்ற வீச்சான இயக்கத்தை நடத்திட, பிரசுரம் கொணர துணை நின்றார். ராஜிவ் காலத்தில் வந்த புதிய கல்விக்கொள்கை எதிர்த்த பிரசுரத்தை என்னையும் இணைத்துக்கொண்டு பெருமளவில் கொண்டு சென்றார் வி ஆர்.

கல்லூரி ஆசிரிய மாநில இயக்கத்தில் மட்டுமல்லாமல், அகில இந்திய பட்டாசார்யா போன்ற தலைவர்களுடன் பெரும் தோழமையை வைத்திருந்தார் வி ஆர்.

இந்திய கம்யூனிஸ்ட் நூற்றாண்டு காலம் இப்போது. தோழர் 1980களின் இறுதியிலேயே கல்லூரியில் Documents of History of Communist party of India என்பதை அங்குள்ள பிரின்சிபல் மற்றும் துறைத்தலைவர்கள் ஒப்புதலுடன் வாங்கி வைத்து என் போன்றவர்களை படிக்க வைத்தார்.

தோழர் வி ஆர் திருச்சி ஈவெரா கல்லூரி சென்று, செனட் உறுப்பினர் ஆனார் என என் நினைவு. ஒரு முறை திருச்சி கூட்டத்திற்கு வந்த என்னை பார்க்க வந்து உபசரிப்பை செய்துவிட்டு போனார்.

அமைதியான ஆனால் அழுத்தம் திருத்தமாக கருத்துக்களை அவர் பதிவிடுவது நினைவிற்கு வருகிறது. தோழர் வி ஆர் அவர்களுக்கு எங்கள் அஞ்சலி எனச் சொல்வதைவிட வேறு என்ன செய்ய இயலும்.

நாங்கள் இருக்கும்வரை எங்கள் நினைவில் இருப்பார் வி ஆர்

dec 19

சில நூல்களும், கருத்துக்களும் காலவரையறைகளில் காணாமல் போகாது, ஒளித்துணையாய் மனித வாழ்க்கையில் வந்துகொண்டிருக்கும். தமிழில் திருக்குறளை அப்படி நாம் கொண்டாடமுடியும்.

Political Track என்கிற வரிசையில் ரூசோவின் சமுதாய ஒப்பந்தம், மார்க்ஸ் எங்கெல்சின் கம்யூனிஸ்ட் மானிபெஸ்ட்டோ, காந்தியின் ஹிந்த் சுயராஜ் போன்ற ஆக்கங்களை நாம் சொல்லலாம். அப்படி சொற்செட்டுடன் மிக ஆழமாக மனித வாழ்வின் துயரங்களை நீக்க துணிச்சலான மாற்றுகளை , காலத்தை விஞ்சி தீர்க்கமாக வைப்பவைகளாக இந்நூல்கள் இருக்கும். இவைகளை இணைத்து படிக்க முடிந்தால் சிறப்போ சிறப்புதான். அவைகளின் சிந்தனைத் திறன் உயர்தரமானவை.

இங்கு நான் கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ வாசித்தலை சொல்ல விழைகிறேன். கட்சிகளில் மானிபெஸ்டோ குறித்து கொஞ்சம் சொல்லிக்கொடுக்கப்பட்டிருக்கும். கேள்வி ஞானம் , சில முக்கிய மேற்கோள்களை நம்பிக்கை அடிப்படையில் வெளிப்படுத்துதல் என்கிற பழக்கம் இருக்கும். அங்கு பலர் ஒருமுறையாவது வாசித்திருப்பர். வாசிக்காத மார்க்சியர் எவராவது இருந்தால் அவசியம் வாசித்தல் நலம். வாழ்வு குறித்த புரிதலை கூடுதலாக பெற மானிபெஸ்டோ உதவும். நூலை உள் நுழைந்து முழுமையாக வாசிக்க வேண்டும்.

மானிபெஸ்டோவின் 25 ஆண்டுகள் துவங்கி மார்க்ஸ் எங்கெல்ஸ் வெவ்வேறு மொழி பதிப்புகளுக்கு முன்னுரை எழுதியிருந்தனர். மார்க்ஸ் மறைந்த பின்னர் எங்கெல்ஸ் இருந்தவரை அவர் புதிய மொழி, அல்லது வருகிற புதிய பதிப்புகளுக்கு முன்னுரை எழுதியிருந்தார். ஆரம்ப வாசகர்களை முன்னுரையை விட்டுவிட்டு நூல் இயல்களுக்கு நேரடியாக சென்றுவிடுங்கள் எனச் சொல்லும் வழக்கம் உண்டு. முதல் முறைக்கு மேல் அந்நூலை அடிக்கடி வாசிக்கச் செல்பவர்கள் அனைத்து முன்னுரைகளையும் படிப்பது உகந்தது. அவை எழுதப்பட்ட ஆவணத்தின் சாரத்தை, சற்று மேலும் ஒளி படவேண்டிய inadequacy யை குறிப்பிட்டு பேசும். 1848 ல் வந்த வரலாற்று ஆவணம் என்பதால், தாங்கள் மாற்ற விரும்பவில்லை என 25 ஆண்டுகள் கழித்த பதிப்பொன்றில் மார்க்ஸ் எங்கெல்ஸ் சொல்லியிருப்பர்.

அவ்வப்போது நம்மிடம் ஏற்பட்டு வரும் political influence , ideological influence , life experiences in movements அடிப்படையில் நம் வாசிப்பும் இந்நூலுடன் சேர்ந்து செல்லும். மார்க்ஸ் எங்கெல்ஸ் இருவரும் 1848 லிருந்து அவர்கள் இருந்த காலம்வரை முதலாளித்துவ தொழில்மயமாதல்- மற்றும் தொழிலாளர் இயக்க வரலாற்றுடன் மானிபெஸ்டோ வரலாறும் பயணிப்பதாக முன்னுரைகளில் சொல்லியிருப்பர்.

மானிபெஸ்டோ அளவில் சின்னஞ்சிறு நூல்தான். மார்க்சிய பதங்களில் கொஞ்சம் பயிற்சி கொண்ட எவரும் 2 மணி நேரத்திற்குள் படித்துவிடக்கூடிய நூல்தான். ஆனால் அது பேசும் கருத்துக்கள் மிக ஆழமானவை. முழுமையாக தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளாமல் படிப்பவர்களுடன் பெரும் உரையாடல் திறப்புகளை மானிபெஸ்டோ செய்திடும். படித்துவிட்டு ஏற்க முடியவில்லை என விமர்சனம் கூட செய்யலாம். ஆனால் படிக்காமல் அது குறித்த ஓரிரு மேற்கோள்களை வைத்துக்கொண்டு புகழ்வது அல்லது இகழ்வது என்கிற ஏமாற்று குறித்து அவரவர்தான் யோசிக்க வேண்டும்.

மானிபெஸ்டோவை ஆங்கில வாசிப்பு பயிற்சி இருக்கும் மார்க்சியர் அல்லாதவர்களும் ஓரிரு முறை வாசித்தல் நலம். இலக்கிய வாசிப்பாளர்கள் கூட வாசிக்கலாம்.

பூர்ஷ்வா குறித்த விமர்சனம் என்கிற வாசிப்பாக, தொழிலாளி வர்க்கம்தான் விடுவிக்கும் என்கிற நம்பிக்கை வாசிப்பாக பலமுறை செய்ததுண்டு. மானிட உறவுகள் வெறும் பண உறவுகளாக சீரழிந்து கிடக்கின்ற நெறியற்ற வாழ்க்கைமுறை என்கிற வாசிப்பில் , மானிபெஸ்டோ காந்தி சந்திப்பு புள்ளிகளைக் கூட நாம் பெறமுடியும்.

இப்பூமி அனைவருக்கும் வாழ்க்கைக்கான ஆதாரங்களை தரக்கூடியதாக இருக்கிறது. ஆனால் சிலரின் பேராசையால் பெரும் துன்ப பூமியாகிறது என்கிற புரிதலை மானிபெஸ்டோ தரும். மீட்சியாளன் தொழிலாளி வர்க்கமா, அவன் தான் புரட்சிகர மனித கூட்டமா வர்க்கமா என்கிற புள்ளி விவாதங்களை பெருக்கலாம். ஆனால் நமக்கு greedy ஏன் என்கிற புள்ளியில் மானிபெஸ்டோவை காந்தி சந்திக்கிறார். வன்முறை வழியில் மாற்றம் எனும் போது அவர் விலகுகிறார்.

மானிபெஸ்டோவின் சில வரிகள் குறிப்பாக அதன் முதல் இரு இயல்கள் முதலாளித்துவம்- தொழிலாளர் இயக்கம் எனப் பேசுகிறவற்றில் வாழ்வை நவீன எந்திர வாழ்க்கை எப்படி சீரழித்துள்ளது என்கிற

சித்திரம் , காந்தியின் ஹிந்த் சுயராஜ்ஜில் சொல்லப்பட்டுள்ள சித்திரமாகவும் இருக்கும். மார்க்ஸ் எங்கெல்ஸ் முன்வைக்கும் radical agenda பலவற்றை நாடுகள் welfare அரசுகளாக சோதிக்காமல் இல்லை. தொழில்கள் அரசுமயம், இலவச கல்வி, மருத்துவம், progressive taxation போன்ற சோதனைகள் நடத்தப்படாமல் இல்லை. ஆனால் பெருந்தொழில் என்கிற முதலாளித்துவ சோதனையை private property என்பதிலிருந்து State property என்கிற Property legality மாற்றம் என்பதாக அவை நடத்தப்பட்டன.

சோசலிசமும் பெருந்தொழிலும் ஒத்துப்போகுமா என்கிற புள்ளி விரிவாக பேசப்படாமல் போனது. காந்தி அதை சோதிக்க நினைத்தார். விடுதலைக்கு பின்னரான காலத்தில், நேருவின் ஆட்சி தொடர்ந்து இன்றுவரை , அச்சோதனை பக்கம் இந்தியா போக முடியாமல் போனது சோகமான ஒன்றுதான். Greedy குணம் 'பத்தலை இன்னும் இன்னும் ' என்கிற ஓட்டம் முதலில் தன் மனசாட்சியைத்தான் மூடிவைக்கும். அதை புறக்கணிப்பதில்தான் தன் சுகத்தை அதனால் காணமுடியும். இப்படி ஒரு வாசிப்பை கூட மானிபெஸ்டோ தருகிறது. இது ஏதோ முதலாளிகளிடம் மட்டுமே உள்ள குணம் அல்ல. நம் எல்லோரிடமும் பற்றியுள்ள போக்கு.

எங்கெல்ஸ் ஒரு முன்னுரையில் முக்கியமான ஒன்றை விளக்கியிருப்பார். சோசலிச திட்டம் கொண்ட மானிபெஸ்டோவை ஏன் 'சோசலிஸ்ட் மானிபெஸ்டோ 'என அழைக்காமல் கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ என்று அழைத்தோம் என்பது அது. சோசலிசம் என்பது அப்போது மத்தியதர வர்க்க இயக்கமாக உணரப்பட்டிருந்தது. தொழிலாளர் இயக்கத்தை நாங்கள் முன் வைத்ததால் கம்யூனிஸ்ட் எனப் பயன்படுத்தியுள்ளோம் என விளக்கம் தந்தார் எங்கெல்ஸ். வேறு ஒரு முன்னுரையில் அவர் சோசலிசம் பூர்ஷ்வா இயக்கம் என மாற்றிச் சொல்லியிருப்பார். இரண்டே ஆண்டு இடைவெளிகளில் எங்கெல்சை மாற்றி பேசவைத்த அனுபவம் என்ன என எனக்குத் தெரியவில்லை.

நேரு பேசிய ஆவடி சோசலிசம் கூட பூர்ஷ்வா சோசலிசமாக சோவியத் யூடினும் இங்கு கம்யூனிஸ்ட்களும் பார்த்ததுண்டு என்கிற ஒன்றை இணைத்துப் பார்த்துக்கொள்கிறேன். மானிபெஸ்டோ முன்வைத்த radical agenda சிலவற்றை நேரு நிகழ்த்திப் பார்த்தார் என்கிற புரிதலும் தேவைப்படுகிறது.

முன்பெல்லாம் மிக மலிவான விலைக்கு கிடைத்த மானிபெஸ்டோ இப்பாதெல்லாம் ரூ 150, ரூ 200 என்கிற விலையில் அமேசானில் கிடைக்கிறது. கம்யூனிஸ்ட்கள் பலரின் வீட்டில் பழைய பிரதிகள்

இருக்கலாம். என் பிரதிகளை வழக்கம்போல் தமிழ் ஆங்கிலம் இரண்டையும் தவறவிட்டேன். எங்கெல்ஸ் கூட மூல ஜெர்மன் பிரதியை தொலைத்துவிட்டதாக எழுதியிருப்பார். மார்க்ஸ் மறைந்த பின்னர் மேம்பட்ட மொழிபெயர்ப்பாக சாமுவேல் மோர் கொணர்ந்த ஆங்கில பதிப்பைத்தான் எங்கெல்ஸ் பாராட்டி சொல்வார். அவர் மேற்பார்வையில் அம்மொழிபெயர்ப்பு வந்தது. அதுதான் நமக்கு கிடைத்து வருகிறது.

என் சி பி எச் நிறுவனத்தார் தோழர் எஸ் வி ராஜதுரை விளக்கத்துடன் விரிவான பதிப்பு ஒன்றை கொணர்ந்துள்ளனர். அவர் சாமுவேல் மோர் மற்றும் ஹால் டிராப்பர் மொழிபெயர்ப்புகளை ஒப்பிட்டு தமிழ் மொழியாக்கத்துடன் பெரிய வேலை உழைப்பை தந்துள்ளார். தீவிர வாசிப்பாளர்கள் ஆய்வு கண்களுடன் அந்நூலை வாசிப்பதும் நலம்.

மானிபெஸ்டோ குறித்து அதன் 25 , 50, 75,100,125, 150 மற்றும் 175 ஆண்டுகளில் காலந்தோறும் ஏற்பட்ட மாற்றங்களுடன் ஏராளம் எழுதப்பட்டுள்ளது. காலத்துடன் பயணித்து வரும் நூலாக கருத்து பெட்டகமாக மானிபெஸ்டோ இருப்பதைக் காண்கிறோம். மனித அறிவு தான் சேமித்த கிடங்குகளிலிருந்து எவரோ ஒரு தீர்க்கதரிசி வழியாக அவ்வப்போது உச்சம் தொடுகிறது. அனைவரின் நல்வாழ்விற்கான ஏக விழைவை அது வெளிப்படுத்துகிறது. அப்படி ஒரு பெரும் புற மாற்றத்திற்கான அக விழிப்பாக மானிபெஸ்டோவும் வாழ்கிறது.

வாசித்து பார்க்க வேண்டிய நூல்

16-9-2024

dec 20

ஏதோ சில உறுப்பினர்களாவது விவரமாக பேசுகிறார்களே என எண்ணிய நேரத்தில், ‘அரசமைப்பு சட்ட 75 ஆண்டுகள் ‘ நிகழ்வு படு மோசமாக முடிந்துள்ளது. உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா அவர்களின் இளக்கார intonation, தொடர்ந்த அமளிகள் நாடாளுமன்ற அரசியலை இப்படியெல்லாம் பாழ்படுத்த முடியுமா என்கிற வினாவை எழுப்பியுள்ளது. எளிய மக்களின் ஏராள பிரச்சனைகள் காலவரையின்றி , மனசாட்சியின்றி, தள்ளிப்போடப்படுவதையே நிகழ்வுகள் காட்டுகின்றன.

பாஜக வளர்ச்சி - சமூக நீதி என்பதைவிட, வாக்கு அரசியலின் சாதுர்யத்தில் எப்படியெல்லாம் தேர்ச்சி பெறமுடியும் என்கிற சதுரங்க ஆட்டத்திலேயே குறியாக இருக்கிறது. அரசியல் ஆட்சி அதிகாரத்திற்கு BC- SC ST க்கள் வாக்கை எப்படி பெறுவது , தனது மேல் சாதி வாக்குகளுடன் இணைத்துக்கொள்வது என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறது. எல்லா அரசியல் கட்சிகளும் வெளிப்படையான எதிரி பிம்பம் ஒன்றை கட்டாமல், விளையாடமுடியாது. அவ்வகையில் இஸ்லாம் , நேருவின் composite culture போன்றவற்றின் மீதான தாக்குதல் இலக்குடன் அக்கட்சி பயணிக்கிறது. இந்த அதிகார விளையாட்டிற்கான எல்லாவித திசை திருப்பல்களையும், எவ்வளவு விலையானாலும் அதைக் கொடுக்க அக்கட்சி தன்னை தயார்படுத்திக்கொண்டுள்ளது. நடைமுறையில் (theoryல் அல்ல) ஆர் எஸ் எஸ் பயிற்சியைக் கூட அது நீர்த்துப்போகவும் கைவிடவும் தயங்காது. Moral politics என்பதைப் பற்றி அதற்கு எவ்வித உறுத்தலும் இருப்பதில்லை.

காங்கிரஸ் காந்தியை தொலைத்தது மட்டுமின்றி, திக்கு திசையின்றி, ஆங்காங்கே இருக்கும் வட்டார கட்சிகளின் அங்கியை போர்த்திக்கொள்ளும் நிலைக்கு சென்று கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. அரசியல் fun களில் குழந்தைத்தனமாக அதன் தலைமை நடந்து கொண்டிருப்பது கவலைக்குரிய ஒன்றாக இருக்கிறது.

விடுதலை இந்திய அரசியலில், நாடாளுமன்ற அரசியலில் , குறைகள் சில இருந்தாலும் matured personalities பலரை தந்த காங்கிரசா இது என்கிற கேள்வி எழுகிறது. நடந்து கொண்டிருக்கும் denehruisationக்கு உரிய மாற்றை தன் சக தோழமை கட்சிகள் ஏற்புடன், இந்தியா கூட்டணி இருக்கும்வரை அதற்கான ‘அஜெண்டா’ - கருத்தொற்றுமை அடிப்படையில் எழுத்து பூர்வமான குறைந்த பட்ச செயல் திட்டம்

ஒன்றை வெளியிட்டு மக்களிடம் செல்ல , காங்கிரசால் முடியாமல் போவது துரதிருஷ்டமானதே. காங்கிரசை வைத்துக்கொள்ளாமல், பாஜக வை வீழ்த்த முடியாது என்பதை ‘ தன் சக்திக்கு மேல் பேராசை ‘கொண்ட சில வட்டார கட்சிகள் உணராமல் இருப்பதையும் பார்க்க முடிகிறது. காந்தியின் moral politics என்பதை காங்கிரஸ் வெகு ஆண்டுகளுக்கு முன்னரே கைவிட்டது பெரும் சோகம்.

டாக்டர் அம்பேத்கர் தான் வாழ்ந்த காலத்தைவிட, விடுதலை அடைந்த இந்திய அரசியல் சூழலில் மெல்ல மெல்ல பேருரு பெற்று நாள் தோறும் உயர்ந்து வருகிறார். அம்பேத்கரை பேசாமல் அரசியல் கட்சி இருக்க முடியாத நிலை உருவாகிவிட்டதை அனைவரும் உணரத்தொடங்கியுள்ளனர்.

விடுதலைக்கு முன்னரான இந்தியாவில்- சிறிது சிறிதாக மகாத்மா என்கிற பேருரு அடைந்த காந்தியடிகள், மெல்ல மெல்ல விடுதலைக்குப் பின்னரான அரசியல் சூழலில் காணாமல் போய் வருகிறார். காணடிக்கப்படுகிறார். எந்த அரசியல் கட்சிக்கும் அவர் தேர்தல் போரில் உதவப்போவதில்லை என்கிற எதார்த்தத்தை இந்திய அரசியல் உணர்த்திக்கொண்டு இருக்கிறது. காந்தி மட்டுமல்ல , மார்க்சும் கூட இந்திய தேர்தல் அரசியலில் கண்ணுக்கு எட்டும் தூரத்தில் தென்படவில்லை.

அம்பேத்கர் தான் வாழ்ந்த காலத்தில் நாயக பிம்பங்களை, ‘ஹீரோ’ வழிபாட்டை போட்டு உடைத்தவர். தீண்டாமை ஒழிப்பு சாதி ஒழிப்பில் தீவிர (Radical) கருத்துக்களை முன்வைத்தவர். சமூக ஜனநாயகத்தை விழைந்தவர். அறிஞர் பேரா டெல்தும்டே தனது Iconoclast நூலில் எழுதியுள்ளபடி

The Legend lives on - Iconization of the Iconoclast.

இந்திய அரசியல் - political social economic Morality என்கிற திசையை ஒருவேளை எடுக்கும் என்றால் , காந்தி உயிர்த்தெழலாம். இல்லையெனில் அக்டோபர் 2ல் பூத்தூவும் நிகழ்வின் சில நொடிகளாகவே இருந்து அவர் தூசி படர்ந்து போவார்.

20-12-2024

dec 21

நீளமான கட்டுரைதான். வாசிப்பவர்க்கு ஆர்வமூட்டலாம். எப்படி அம்பேத்கர் துணைவியார் டாக்டர் சவீதா (சாரதா கபீர்) நூல் சுவாரஸ்யமானதோ, அதே போல் இந்திராணி அவர்களின் நூலும் வாசிக்க சுவாரஸ்யமானதும், அரசியல் போக்குகளை அவர் புரிந்த கோணத்தில் சுட்டிக்காட்டுவதாகவும் இருக்கும்.

இந்திராணி ஜெகஜீவன்ராம்

சுயசரிதைகள் சுவையானதாகவும் செய்திகளைத் தரக்கூடியதாகவும் இருக்கும். சில நேரம் நல்ல அனுபவமாக இருக்கிறதே எனக்கூடத் தோன்றும். அடுத்தவர் வாழ்க்கையை எட்டிப்பார்க்கும் மனோபாவம் இருக்கத்தானே செய்கிறது.

திருமதி இந்திராணி ஜெகஜீவன்ராம் தன் வரலாறு நினைவுக் குறிப்புகள் ஆங்கிலத்தில் Milestones என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. வந்து மாமாங்கம் ஆகிறது. இந்தியில் 1990களில் மூன்று வால்யூம்களாக அவை இந்தியர்களுக்கு கிடைக்கப்பெற்றன. ஆங்கிலத்தில் 300 பக்கங்களில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது . பெங்குவின் இந்தியா கொணர்ந்துள்ளனர். மகள் புகழ்வாய்ந்த மீராகுமார் சிறிய முன்னுரை எழுதியுள்ளார்.

1946 லிருந்து மிக உயர்ந்த அதிகார ஆட்சிமுறை வீட்டின் பெண்மணி என்கிற வகையில் இந்திய அரசியலின் நுணுக்கங்களை- அதன் மேடு பள்ளங்களை நன்கு அறிந்தவராகவே இந்திராணி அம்மையார் இருந்திருப்பார். எதைச் சொல்லலாம் - கூடாது என்பதில் அவருக்குள் போராட்டம் நடந்திருக்கும்.

பாபுஜி என அழக்கப்பட்ட ஜெகஜீவன் வாழ்க்கையில் சக தோழியாக, இந்திய விடுதலைப் போரின் கட்டங்கள், காந்தி படுகொலை, ஜெகஜீவன் பல்வேறு துறை அமைச்சர் அனுபவங்கள், பாகிஸ்தான் மற்றும் சீன போர், நேருவின் மறைவு என பல்வேறு விஷயங்களை இந்திராணி தன் நினைவுகளிலிருந்து பேசுகிறார். ஜெகஜீவன் மறைந்த பின்னர் 15 ஆண்டுகள் வாழ்ந்து தனது 91 ஆம் வயதில் வாழ்வை நீத்தவர் இந்திராணி.

அவரது வாழ்வின் இளம் பகுதியிலிருந்து…

1900த்தின் ஆரம்ப ஆண்டுகளின் சாதிய ஏற்றத்தாழ்வின் வெம்மையை உணர்ந்தே இந்திராணியின் கல்வி வாழ்க்கை கடந்தது. 1850 களின் காலத்திய தந்தையார் பீர்பால்தாஸ் - பிரிட்டிஷ் ஆசிரியர் மற்றும் இங்கிருந்த சில நல்லாசிரியர்கள் துணையுடன் கல்விக்கூடம்

நுழைந்ததுடன் இராணுவ டாக்டரின் உதவியுடன் மருத்துவம் தேர்ச்சி பெற்று கான்பூரில் டாக்டர் தொழிலை நடத்தலானார். ஆரம்பத்தில் பிரிட்டிஷ் இராணுவ மருத்துவராக இருந்த அனுபவம் உதவியது.

துசியாஸ் (dhusias) என்கிற துணைச்சாதி ஒன்றில் பிறந்த பூர்வீக குடும்பமது. துசியாஸ் பொதுவாக தோல் தொழில், விவசாயக் கூலிகளாக இருந்தனர். பீர்பால் கல்வியின் அவசியத்தை குழந்தைகளுக்கு உணர்த்தினார். பெண்களை கல்வி கற்க அனுப்பினார். வீட்டில் உருது சமஸ்கிருதம் கற்க வைத்தார். பெண் குழந்தைகள் காயத்ரி சொல்லின. ஆரிய சமாஜம் பீர்பாலை அரவணைத்தது. பீர்பால் அவ்வூரின் அனாதை குழந்தைகளுக்கென தனி விடுதி உருவாக்கி , கல்வி கற்க வைத்தார். அனாதையான பிராமண, சத்திரிய குடும்ப குழந்தைகள், பீர்பால் வீட்டு குழந்தைகளுடன் தங்க வைக்கப்பட்டனர்.

டிஸ்பென்சரியிலிருந்து பீர்பால் இரவு 9 மணிக்கு வரும்போது, அனைத்து குழந்தைகளுக்கும் தினம் பழங்கள் கிடைக்கும்.

கான்பூரில் இந்திராணி சாதி அறிந்த அந்த பலிகா வித்யாலயா உயர்நிலைப்பள்ளி சேர்க்க மறுத்தபோது, லக்னோ பள்ளியில் விடுதியில் சேர்த்து படிக்க வைத்தனர். இந்திராணி உட்பட மாணவிகளுக்கு பிராமண சமையல் அம்மாவும், பாத்திரம் சுத்தம் செய்ய சாதி இந்து அம்மாவும் இருந்தனர். இந்திராணி சாதி தெரிந்தவுடன் அவர் தட்டை சுத்தம் செய்ய முடியாது என்ற நிலை உருவானது. சக மாணவிகள் உடன் அமர்ந்து உணவு எடுத்துக்கொள்ள மறுத்தனர்.

ஆங்கிலோ இந்திய வார்டன் மாது இந்திராணி பக்கம் நின்றார். பின்னர் நிலைமைகள் சரியாகி, பிராமண பெண்கள் நல்ல தோழிகளாகினர். இந்திராணி உடல் நலம் பாதித்த போது, அவளுக்கு பதில் என்னை எடுத்துக்கொள் கடவுளே என வேண்டும் அளவிற்கு நட்பின் ஆழம் சென்றது.

பீர்பால் ஏராளம் சம்பாதித்தார். பல முதலீடுகள் நட்டமாயின. மகனுக்கு கொடுத்த நிதிகளும் முடங்கி , 70 ஆம் வயதுகளில் பணம் இல்லாமல் குடும்பம் கஷ்டத்திற்கு உள்ளானது. அம்மா சைதன்ய தேவி சமாளித்தார். மூத்த பெண் மட்டுமே திருமணமான நிலை. அண்ணன், அப்பா, அம்மா என இறப்புகள் நேர அக்கா மற்றும் அவரது கணவரின் பராமரிப்பில் இந்திராணி வந்தார். ஆசிரியப்பணி கிட்டியதால் குடும்பத்தை சமாளிக்க முடிந்தது.

மற்றொரு சகோதரி பாரத்தை நீக்க கொடுமைக்கார குடும்பம் ஒன்றில் தன்னை ஒப்படைப்பு செய்துகொண்டார். இச்சூழலில்தான், காங்கிரஸ் முழுநேர ஊழியர் ஜெகஜீவன் ராமை இந்திராணிக்கு பார்க்கலாம் என உறவுக்காரர் சொல்லி திருமண பேச்சுவார்த்தை நடந்தது.

சந்த்வா கிராமம் போகவேண்டுமெனில் காலையில் இரயில் ஏறினால் மாலையில் போகலாம். நகைநட்டு போட்டு திருமண பழக்கம் இல்லை என ஜெகஜீவன் குடும்பத்தார் தெரிவித்தனர். மாப்பிள்ளை கல்வித்தகுதி என்ன என இந்திராணி குடும்பம் கேட்டது. அதற்கு ஜெகஜீவன் நான் வேலைக்கு விண்ணப்பிக்கவில்லை. பயோடேட்டா எதற்கு என்றாராம். ஒரு வழியாக திருமணம் ஜூன் 1, 1935 ல் நடந்து புதிய உலகத்திற்கு , கிராமத்திற்கு நகர வாழ்க்கையின் இந்திராணி வந்து சேர்கிறார். குடும்பத்தார் அன்புடன் நடத்துகின்றனர்.

கொந்தளிப்பான அரசியல் சூழல்களில் ஈடுபட்ட கணவனுடன் இந்திராணி எப்படி சக பயணியாக வாழ்ந்தார் என்பதை வாய்ப்பு உள்ளபோது அடுத்து பார்க்கலாம்.. (nov 25 2023)

2.

Milestones-இந்திராணி ஜெகஜீவன்ராம்

திருமதி இந்திராணி அம்மையார் தனது வாழ்க்கை குறித்த நினைவுக்குறிப்புகளில் இந்திய விடுதலைபோராட்டக் காலத்தின் சில கட்டங்களையும் சொல்லியே நகர்கிறார்.

ஜெகஜீவன் கல்விச் சூழலில் தீண்டாமை எதிர்த்து போராடியது, ரவிதாஸ் இயக்கம் தொடங்கி இளைஞர்களை அணிதிரட்டியது, இந்து மகாசபை மாநாடுகளில் தலித் மக்களின் நலனுக்கான தீர்மானங்களை கொணர்வது , முனிசிபல் மற்றும் 1935 சட்டப்படியான தேர்தல்களில் பாபு ஜெகஜீவன் பங்கேற்றது குறித்து இந்திராணி சொல்லிச் செல்கிறார்.

ஜெகஜீவன் குடும்பத்தில் தாயாரும் அண்ணிமாரும் துளசிதாசர் பஜன்களை ஊராருடன் பாடுவது, பக்தி மார்க்கத்தில் ஈடுபாட்டுடன் இருந்ததைக் குறிப்பிடுகிறார்.

வட்டமேஜை மாநாடு துவங்கி 1937 காங்கிரஸ் வெற்றி -அமைச்சரவை காலத்தில் அவர் பதிவு செய்த மூன்று முக்கிய அம்சங்களை இங்கு தந்துள்ளேன். காந்தியுடன் பிரசாத் வழியாக பயணித்தல், காந்தியுடன் வேறுபாட்டை சொல்தல், அம்பேத்கருடன் முரண்படுதல் அவரை சந்தித்து இணக்கமாதல், பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் இணங்குவதா

முரண்படுவதா போன்ற அம்சங்களில் இந்திராணி பதிவை தந்துள்ளேன்.

பிரிட்டிஷ் பிரதமராக இருந்த ராம்சே கொடுத்த 1932 கம்யூனல் அவார்ட், அதில் தனித்தொகுதி என்பது depressed class பகுதியை இந்துக்களிடமிருந்து பிரித்துவிடும் என்பதற்கான காரணங்களைச் சொல்லி காந்தியின் உண்ணாவிரதம், புனே உடன்பாடு ஆகியவற்றை இந்திராணி சொல்கிறார். அவர் தன் பதிவை கீழ்கண்டவாறு தந்துள்ளார்.

The British backed him (dr Ambedkar) against Gandhi in order to spread disunity in the nationalist movement, but the general public was highly agitated. Gandhiji was a symbol of freedom for the common man.

அடுத்து ஜெகஜீவன் அறிக்கை ஒன்றை சுட்டும் பதிவு

The All India Dalit Varga Sangh had gained prominence as a representative of Harijan body. Dr Ambedkar felt that it had become a challenge to his leadership.Jagajivan said that it is sad that a brilliant person like Dr Ambedkar is separating from Dalit varga movement, but we are happy that Hindu society will not be divided.

ஜெகஜீவன் புனேயிலிருந்து பம்பாய்க்கு அம்பேத்கரை பார்க்கப்போனார். பரஸ்பர மரியாதையுடன் உரையாடல் இருந்தாலும், இந்து மதத்திலிருந்து மாறவேண்டிய அவசியத்தை அம்பேத்கர் வலியுறுத்தினார். தலித் பிரச்சனைகளை மதமாற்றத்தால் தீர்க்கமுடியாது என்கிற தன் முடிவை ஜெகஜீவன் தெரிவித்து திரும்பியதாக இந்திராணி எழுதியுள்ளார் (பக் 51)

இங்கு இந்திராணி எழுதியிருக்கும் மற்றொரு வரி

Dr Ambedkar’s call for conversion made him the centre of attraction in the entire Indian social set up. (nov 29 2023)

3.

Milestones இந்திராணி ஜெகஜீவன்ராமின் நினைவுகள் போன்ற புத்தகங்கள் விடுதலைக்கு பின்னரான நவீன இந்திய அரசியலின் நுட்பங்களை புரிந்துகொள்வதற்கு பயன்படலாம்.

எதை இந்திராணி போன்றவர் வெளிப்படுத்த முடிகிறது, எங்கு அவர்கள் மெளனமாகி போகின்றனர் என்பதை கவனப்படுத்திக்கொள்ளமுடியும். அடித்தட்டில் சிறு கிராமத்திலிருந்து உயர் அதிகாரம், சொகுசு தோரணைகளுக்கு செல்பவர்களின்

பிம்பங்களும் அவர்கள் உளவியல் பாடுகளும் இந்நூல் போன்றவற்றில் ஓரளவிற்கு கிடைக்கும்.

இந்திராணி , கணவனே கண்கண்ட தெய்வம்- மாமியாரை மெச்சும் மருமகள் என்ற பிம்பத்தை எனக்குத் தருகிறார். நேரு கால காபினட்டிலிருந்து இந்திரா கால வங்கதேச உதயம் வரையிலான காலம் இங்கு சித்தரிக்கப்பட்டுள்ளது. நிகழ்ந்த அத்துனை நல்லதிலும் ஜெகஜீவன் பங்கு, பங்கே விதந்து பேசப்பட்டுள்ளது. ஜெகஜீவனுக்கு சோதனை என்றால் அவையெல்லாம் சதிகளாக, பொறாமை பொச்சரிப்புகளாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜெகஜீவன் பீகாரின் கிராமத்திலிருந்து டெல்லியின் உயர் ஆட்சி அதிகாரத்தின் பெருவெளிகளைக் கண்டவர். அரசியலில் விளைந்து நின்றவர். பாபு ராஜேந்திரபிரசாத்தின் நம்பிக்கைக்குரியவராக இருந்தவர். காங்கிரசின் மேல்தட்டு விவகாரங்களை அவர் மூலம் பார்த்தவர். தொழிலாளர் அமைச்சராக , விவசாய அமைச்சராக, தகவல் தொடர்பு, போக்குவரத்து, ரயில்வே, பாதுகாப்பு என பல்வேறு இலாகாக்களின் நுட்பங்களை அறிந்தவர். சிலநேரம் radical toneகளை வெளிப்படுத்தியவர்.

காமராஜரின் கே பிளானால் ஜெகஜீவன் பழிவாங்கப்பட்டார் என்ற உணர்வை இந்திராணி வெளிப்படுத்தியுள்ளார். நேரு மறைவிற்கு பின்னர் லால்பகதூர் அமைச்சரவையில் 20 ஆண்டுகளுக்கு முன்பே அவர் பெற்ற அதே தொழிலாளர் துறை தரப்பட்டபோது அவரது மனைவி, மகள் மீரா, மகன் சுரேஷ் கோபமடைந்தனர். மொரார்ஜியைவிட தான் சீனியர் என்ற உணர்வு நியாயமாகவே ஜெகஜீவனிடம் இருந்தது.

சிண்டிகேட் இந்திரா காங்கிரஸ் என்கிற பிளவு வந்தபோது, மொரார்ஜியா இந்திராவா என வெளிப்படையாக நிற்காமல் ஜெகஜீவன் இருந்தார் என்கிற சந்தேகம் இருபக்கமும் இருந்தது. இந்திரா சாதுர்யமாக ஜெகஜீவனை இழுத்துவிட்டார் என்பதை இந்திராணி எழுத்துக்கள் காட்டும். குடியரசு தலைவர் தேர்வு குறித்து காங்கிரஸ் கமிட்டி விவாதித்தபோது ஜெகஜீவன் பெயரை இந்திராகாந்தி முன்மொழிந்தார். மொரார்ஜி எதிர்த்ததை இந்திரா சாதகமாக்கிக்கொண்டார். அத்தேர்தலில் வி வி கிரியை வெற்றிபெறவும் வைத்தார். உடைந்த காங்கிரசின் இந்திரா பிரிவின் அகில இந்திய தலைவராக ஜெகஜீவன் ஆக்கப்பட்டார். இந்திரா காங்கிரஸ் என பொதுவாக அறியப்பட்ட ஒன்றை ஜெகஜீவன் காங்கிரஸ் என இந்திராணி எழுதியுள்ளார்.

மாடு கன்று சின்னம் கூட தன் மகன் சுரேஷ் சொல்லி, காங்கிரஸ் சின்னமானதாக இந்திராணி செய்தி தருகிறார். வங்கதேச விடுதலைக்கான - அகதிகள் சமாளிப்பு பெயரிலான யுத்தத்தின் போது ஜெகஜீவன் பாதுகாப்பு அமைச்சர். அந்த வெற்றிக்கு பின்னரான அரசியல் சாதுர்யத்தை தன் கணவர் அற்புதமாக வெளிப்படுத்தியதாக, வங்க விடுதலைக்கு காரணமாக இருந்ததாகவும் இந்திராணி பதிவு சொல்கிறது.

1972 உடன் இந்த ஆங்கில மைல்ஸ்டோன் பதிவை நிறுத்திவிட்டனர். இந்நூலுக்கு முன்னுரை எழுதிய மீராகுமார் கீழ்கண்ட வரிகளை எழுதியுள்ளார்.

The unpublished script, apart from offering insight into other events, also gives an insider’s account of the Emergency and the subsequent events that changed the course of India’s political history. Babuji was keen that Ma’s work be published in English as well

இந்த நூலை படித்தபோது எனக்கு தோன்றிய உணர்வு- ஜெகஜீவனை குடியரசு தலைவராகவோ, பின்னர் ஜனதா காலத்தில் பிரதமராகவோ ஆக்க இந்திய அரசியல் தயங்கிவிட்டதோ என்பதாக அமைந்தது. அவர் நேரு , ஜாகிர் ஹுசைன் , நாரயணன், அப்துல்கலாம், மன்மோகன் போல் அறிவுஜீவியாக இல்லாமல் இருந்திருக்கலாம். அரசியல் சாதுர்யத்தில், நடைமுறை சார்ந்த உத்தி முடிவுகள் எடுப்பதில் அவர் குறைந்தவராக இருந்திருக்கமாட்டார். கே ஆர் நாரயணன், அப்துல்கலாம் போன்றவர்களைவிட பெரும் அரசியல் பங்களிப்பை செய்திருந்தும் , அரசியல் உலகம் அவரை குடியரசுதலைவராக்காமல் விட்டது. பிரணாப் விட கூடுதலான அரசியல் பங்களிப்பை அவரிடம் நாம் காணமுடியும்.

சரண் சிங், தேவகௌடா, வி பி சிங், குஜ்ரால், சந்திரசேகர் போன்றவர்கள் வரமுடிந்த பிரதமர் பதவிக்கும், ஜனதா சோதனையில் ஜெகஜீவன் வரமுடியாமல் போனது. அவரிடம் அவர் குடும்பத்தார்களிடம் அதிகார சொகுசு விருப்பார்வங்கள் இருந்திருக்கலாம். அவர் ஒரு போதும் டிக்டேடர் ஆகியிருக்க மாட்டார். விடுதலைக்கால மாண்புகளின் தன்மைகளை, ஜனநாயக பண்புகளை தவறவிட்டிருக்க மாட்டார் என்றே தோன்றுகிறது.

ஆங்காங்கே இடைவெளிகளையும் இட்டு நிரப்ப வேண்டிய தேடல்களையும் இந்த நூல் வரலாற்று மாணவர்களுக்கு வேலைகளாக கொடுத்திருப்பினும் சமகால அரசியலுக்கு , ஜெகஜீவன் வழியாக

இந்திராணி அளித்துள்ள பங்களிப்பு என இந்த மைல்ஸ்டோன் புத்தகத்தைக் கருத முடியும்.

இந்திய அரசியல் உள் விளையாட்டுகள் , பதவிக்கான அரசியல் snake and ladderல் நடைபெறுபவை, பல்வேறு பிரச்சனைகளில் முடிவுகள் எப்படி எவர் தாக்கத்தில் எடுக்கப்படுகின்றன, அவற்றின் பாரதூர விளைவுகள் குறித்து ஏராள புத்தகங்கள் தேவைப்படுகின்றன. அப்படி ஒன்றாக பத்திரிகையாளர் நிரஜா சௌத்ரி எழுதிய ஒன்று how PM decides விவாதிக்கப்பட்டு வருகிறது. Insiders account என்கிற முடிந்தவரை நேர்மையான பதிவுகள் தான் இந்திய ஜனநாயகத்தை வலுப்படுத்தும் , புரிதலை மேம்படுத்த உதவக்கூடும்.

(dec 13 2023)

dec22

மென் மனிதர் கோகலே

கோகலே மற்றும் திலகர் குறித்து அறிந்தவை குறைவுதான். காந்திக்கு முன்னரான விடுதலை அரசியலில் சுரேந்திர பானர்ஜி, திலகர், கோகலே, பிபின் சந்திரபால், லாலாஜி, மோதிலால் , அன்னி பெசண்ட் போன்ற சில பெயர்கள் தொடர்ந்து பேசப்பட்டனவாக இருந்தன.

குறிப்பாக கோகலே எதிர் திலகர் என்பது தான் பெரும்பாலும் ஆரம்ப பேச்சாக அமையும். கோகலே என்றால் பேராசிரியர், பிரிட்டிஷ் நாடாளுமன்ற முறைகள் வழியே மெல் குரலில் நியாயம் கேட்டவர்- திலகரின் உஷ்ணப்பேச்சுக்களை ஏற்காமல் முரண்பட்டவர்- காந்தியால் குருநாதர் என ஏற்கப்பட்டவர், தென் ஆப்ரிக்க இந்தியருக்கு துணை நின்றவர், சட்ட அவைகளில் பங்காற்றியவர் என்கிற ஓரிரு வரி பொது புத்தி செய்திகள் அவர் குறித்து நிலவும்.

கோகலே குறித்த நல்ல அறிமுகத்தை டி ஆர் டியோகிரிகார் தன் நூல் வழி தருகிறார். இப்புத்தகத்தின் 60 ஆண்டுகளை நாம் கடந்து போகிறோம். காந்தி குரு எனச் சொன்னதால் வயதில் கூடுதலாக மூத்தவரா எனப் பார்த்தால், இல்லை என அறியலாம். காந்தியைவிட கோகலே 3 வயது தான் மூத்தவர். காந்தி செய்த பணிவிடைகளை பார்த்தால், அதிக வயது வித்தியாசம் உள்ள ஒரு பெரியவருக்கு செய்தது போல் இருக்கும்.

மராத்திய பகுதியின் மூத்தவர் எம் ஜி ராணடே தான். புகழ் வாய்ந்த சமூக சீர்திருத்தவாதி, நீதிமான், பிரிட்டிஷ் பொருளாதார சுரண்டலை வெளிக்கொணர்ந்தவர். கோபால கிருஷ்ண கோகலேவின் குரு அவர்.

ராணடே பின்னிருந்து தக்காண கல்வி கழக அமைப்பில் திலகரும் கோகலேயும் இளம் தளபதிகளாக ஆசிரியப்பணியை செய்து வந்த ஆரம்ப காலமது. திலகர் கணக்கு வாத்தியாராக இருந்தபோதும், கோகலே பள்ளி மாணவர்களுக்கு எழுதிய கணக்கு பாடத்திட்ட நூல் பரவலான ஏற்பிற்கு சென்றது. திலகரிடம் கொடுத்து அவர் சரி பார்த்தார். இதை நூலாக அனைத்து பள்ளிக்கும் கொண்டு செல்வோம் என தட்டிக்கொடுத்தவரும் திலகர்தான். அப்படி ஒரு தோழமையும் அவர்களிடம் இருந்தது. கோகலே ஆங்கில வாத்தியாராக நியு இங்கிலீஷ் பள்ளியில் சேர்ந்த நேரமது.

கோகலேயைவிட ராணடே 24 வயது பெரியவர். திலகரும் 10 வயது மூத்தவர். ஆனால் அரசியல் போக்குகளும், தனி மனித குணங்களும்

எவரை எப்போது எப்படி அழைத்துப்போகும், அலைக்கழிக்கும் என எவர் தான் முன் கூட்டியே அறிய இயலும்.

இந்த ராணடே கிழங்களின் நிதானம், அவர்கள் காங்கிரஸ் மாநாடு என்றால் அங்கு சமூக மாநாடு எனச் சொல்லும் அழுத்தங்களை, வேறு சிலர் ஏற்கவில்லை. திலகர் தீவிரமாக செல்ல ராணடே போன்ற பெரியவர்கள் தடையாக இருப்பதை உணர்ந்தார். டெக்கான் சொசைட்டியை கைப்பற்ற ஆட்களை திரட்டினார். அதை தன் கட்டுக்குள்ளும் கொணர்ந்தார். ராணடே வெளியேறி தங்களுக்கான தனி டெக்கான் கழகத்தை உருவாக்கினார். கோகலே செயலரானார். பிரிட்டிஷ் அதிகாரிகள் இந்த மென்மையானவர்களை- இந்த சொசைட்டியை அங்கீகரித்து மதிக்கலாயினர். கமிட்டி சாட்சியங்களுக்கு கோகலே லண்டன் செல்லவாய்ப்பும் கொடுத்தனர்.

பொதுவாக சூரத் மாநாடு தான் கோகலே- திலகர் என்கிற இரு பிரிவை வலுப்படுத்திவிட்டது என்பர். ஆனால் வேறுபாட்டிற்கான விதையை ஊன்றியது டெக்கான் சொசைட்டிதான். ராணடே 1901 லேயே மறைந்து விட்டார். திலகர் அகர்கர் என்கிற ஜோடி கேசரி , மராத்தா போன்ற பத்திரிகை வழி தங்கள் எரிமலை எழுத்துக்களை தரலாயினர்.

திலகர் பதிவின்படி இவர்கள் ஆசிரியராக இருந்தபோது மாதம் ரூ 75 சம்பளம், ஆண்டு போனஸ் ரூ 400, காப்பீடு பாலிசி தொகை ரூ 3000 எனத் தரப்பட்டதாம். கோகலே ஆங்கில ஆசிரியராக ரூ 35 ஊதியத்தில் நுழைந்ததாக சொல்கிறார். அவரின் 19 ஆம் வயதில் இந்த ஊதியத்தில் அவர் நுழைந்தார்.

அம்பேத்கர் குடும்பம் சற்று வசதியான குடும்பம் என்பது குறித்த வேறொரு நூலில் டெல்தும்டே விவரிக்கிறார். அம்பேத்கர் தந்தைக்கு மிலிட்டரி பென்சன் ரூ 50 எனச் சொல்லி, இக்காலத்தில் அதன் மதிப்பு ரூ 78750 எனக் கணக்கீட்டை கொடுக்கிறார். (மத்தியதர அதிகாரி அளவு பென்சன் இன்று என எடுத்துக்கொள்ளலாம்.)

அதாவது 1907 ல் ஒரு ரூபாய் இப்போது ரூ 1575க்கு சமம் என டெல்தும்டே கணக்கு தருகிறார். அது சரி என்றால், கோகலே திலகர் எல்லாம் ஆசிரியத் தொழிலில் ஓரளவிற்கு நல்ல சம்பளம் பெற்றதாகவே சொல்லலாம்.

கோகலே தன் 21 ஆம் வயதிலேயே பலரையும் திரும்பிப் பார்க்க வைக்கும் கட்டுரைகளை எழுதலானார். திலகரின் கேசரியும் கோகலே எழுத்துக்களை வெளியிட்டது.

கோகலே குடும்ப வாழ்க்கை சோகமானதும் கூட. அவரின் 14 வயதில் முதல் திருமணம் நடந்தது. மனைவியாக வந்த குழந்தை பெண் நோய் பாதிப்பு நிலையில் இருந்ததால், இரண்டாவது திருமணம் கோகலேவிற்கு நடத்தப்பட்டது. தன் வாழ்நாள் உறுத்தல் என கோகலே இதைக் கருதினார். 1900ல் கோகலேவின் 34 ஆம் வயதில் அப்பெண்ணும் மரித்தார். மகன் போனதும் அவரை வாட்டியது. தப்பியது காசிபாய், கோதுபாய் என்கிற அவரின் இரு பெண்கள்.

ராணடேவை குருவாக ஏற்றாலும், அவரது காலடியில் அமர்ந்து பொது வாழ்வின் கூறுகளை கற்றாலும், சமூக புரட்சி என்பதை விட, அரசமைப்பு பாதைவழி அரசியல் என்பதில் கோகலே நாட்டம் சென்றது. ராணடேவும் அவ்வழி உகந்தது எனச் சொன்னவர்தான். ராணடேவின் மறைவிற்குப் பின்னர், கோகலே அதே பாதையில் எந்த தடையும் இல்லாமல் செல்ல முடிந்தது. ராணடே சமூக சீர்திருத்தம் பேசினாலும், விதவை மறுமணம் பேசினாலும், அவர் இரண்டாம் திருமணமாக வயது குறைந்த பெண்ணை மணம் செய்து கொண்டது விமர்சனமானது. இந்த அனுபவங்களினால், சமூக சீர்திருத்தம் பேசினால், அதை சொந்த வாழ்வில் அனுசரிக்க முடிந்தால் மட்டுமே வலியுறுத்த வேண்டும் என்பதை கோகலே எடுத்துக்கொண்டார்.

பெரியார் மணியம்மை திருமணம் தமிழக அரசியலின் திருப்பு முனையாக, திமுக உருவாக்கம், தேர்தல் , அண்ணா ஆட்சி என்கிற புதுவகை அரசியல் திசையை உருவாக்கியது. நீதிக்கட்சியின் வேறொரு நீட்சியாக திமுக உருவாகி விஸ்வரூபம் எடுத்தது.

ராணடே காந்தி ஜின்னா பற்றி பேசிய அம்பேத்கர் , ராணடே ‘அரசியல் அதிகாரம் பின்னர் சமூக சீர்திருத்தம் ‘ என்றில்லாது, இந்திய சமூகம் தன்னை முதலில் சீர்திருத்திக்கொள்ள வேண்டும் என்கிற பாதை குறித்து சிலாகித்து பேசி, காந்தி ஜின்னாவைவிமர்சித்திருப்பார். நாயக வழிபாடு அரசியலையும் விமர்சித்திருப்பார். ராணடே திருமணம் பற்றி அதில் ஏதும் பேசியிருக்கமாட்டார்.

கோகலே இப்படி சமூக சீர்திருத்தம் குறித்து எம்முறையையும் கைக்கொள்ளவில்லை. ராணடே இருந்தவரை அவரது ஆலோசனைகளை கேட்டே காரியமாற்றினார். 1892-97 நாட்களில் கோகலே ராணடேவை தினம் சந்திப்பவராக இருந்தார். ராணடே மறைந்தவுடன், அவரது வாழ்க்கை சரிதம் தானே எழுதுவது சரி எனவும் நினைத்தார். வாழ்வின் இழுப்புகளால் அவர் அதை செய்யவில்லை.

சரி. நீளம் கருதி நிறுத்திக்கொள்கிறேன். வேறொரு நேரத்தில் வாய்ப்பு இருந்தால் சொல்லலாம். ராணடேயிடமிருந்து

கோகலே கற்றதை தியோகிரிகர் கீழ்கண்ட வரிகளில் தருகிறார்.

How knowledge was to be combined with faith and fortitude in order to serve the people , how accuracy of figures was essential in dealing with intricate problems, how vigour of language, all this more Gokhale learnt from the master

22-12-2024

dec 23

நினைவுக் குமிழிகள்

குழந்தைகளாக நாங்கள் வளரத்துவங்கியபோது, குடும்ப பெரியவர்கள் எங்களுக்கு சொல்லித்தந்த அறிவுரைகளில் ஒன்று- இடது கையால் செய்வது வலது கைக்கு கூட தெரியக்கூடாது. எதற்கும் ஆடக்கூடாது. அமைதியாக வேலையை பார்த்துவிட்டு போகவேண்டும். தாம் தூம்னு குதிக்கக்கூடாது.

நாங்கள் பார்த்து வளர்ந்த அக்கம்பக்கத்து பிள்ளைகளும் இப்படி இருந்ததைக் கண்டோம். பெரிய வேலை கிடைத்திருக்கும், நிறைய மார்க் வாங்கி மருத்துவ படிப்பு கிட்டிருக்கும், பிர்லா இன்ஸ்டிட்யூட் கிடைத்திருக்கும், ஸ்டேட் பாங்கில் வேலை என பலர் இப்படி குதியல் இல்லாமல் அதை அமைதியாக , மகிழ்ச்சியை துள்ளலாக வெளிக்காட்டாமல் அடக்கத்துடன் உள்வாங்கியதை பார்த்த அனுபவம் இருந்தது. பொதுவாக எல்லோரும் சங்கோஜிகள் - கூச்சப்படுபவர்கள் எனப் பெயர் எடுத்து பார்த்ததுண்டு.

காந்தியர்கள், ராஜாஜி , பித்துக்குளி முருகதாஸ் வந்து தங்குவார்கள் என்கிற வீட்டின் தியாகி மருத்துவர் இரவு சைக்கிளில் ஏறிக்கொண்டு, மேல் துண்டுடன் ஒடுக்கப்பட்டோர் வாழிடப் பகுதிக்கு போய் சிகிட்சை அளித்துவிட்டு, அவர் எவராவது சைக்கிளிலேயே திரும்ப வருகிற காட்சிகள் கிடைத்தது. தெரு திண்ணைகளில் தவறாக படிக்கும் சிறுவர்களை அமைதியாக அருகே வந்து சரியாக சொல்லிக்கொடுத்து, முதுகில் தட்டிக்கொடுத்த பெரியவரை பார்த்ததுண்டு. சிறுவர்களிடம் அவரளவு குனிந்து நலம் விசாரித்து செல்லும் அன்பான மூத்தவர் உண்டு. பெரியவர்களும் பணிந்ததை பார்த்ததுண்டு. சிறிய தெருவில் , சத்தமில்லாமல் 10 பையன்களுக்கு சிலம்பம் கற்றுத்தந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் உண்டு. எங்குமே விளம்பரம் இருக்கவில்லை. போட்டோ கலாச்சாரமில்லை. மனமும் மூளையும் ஏற்று வைத்துக்கொள்ளும் பதிவுதான்.

தஞ்சை கரந்தை சந்நதி தெரு வீட்டில் அமைச்சர் கக்கன் வந்து ஸ்வீட் காரம் காபி சாப்பிட்டுவிட்டு, கூட்டமின்றி சென்றதுண்டு. போட்டோக்கள் என ஏதும் எங்கள் எவரையும் எடுக்கவில்லை. மரகதம் சந்திரசேகர் அவர்களிடம் மார்கழி திருவெம்பாவை- திருப்பாவை ஒப்பித்தலுக்காக எங்களில் சிலர் பரிசு பெரும்போதோ, அதை எடுத்து வந்து காட்டியபோதோ எந்த துள்ளலும் இல்லை.

பள்ளி வாத்தியார் கூட 10 பேரை வைத்துக்கொண்டு , குறை சொல்லாமல், தனியே அழைத்து அட பைத்தியம் , 'ஸ்கூல் பஸ்ட்ட' விட்டுட்ட என சொல்லியதைக் கண்டோம். ஒருவர் மீது மற்றவர்க்கான கரிசனம் ரொம்ப subtle ஆக இருந்த அனுபவம் கிடைத்தது. எதையும் ஆகா ஒகோவென ஆரவாரமின்றி செய்யாமல் கற்கும் சூழலை சமூகம் கொடுத்தது. கஷ்டம் என உணரும் பெண்கள் , தனியே கடவுளிடம் போய் தான் என் குறையை சொல்லி அழவேண்டும் என பேசியதைக் கேட்டதுண்டு. இந்த ஆரவாரமற்ற பேச்சு, செயல் எல்லாம் அர்த்த மற்றவையா , இன்றைய சூழலில்..

தெருவில் இருந்த கோயில்களில் அன்றாட மண்டகப்படி விநியோகம் கூட பெரும் சத்தமில்லாமல் நடந்தது. எவர் பெயரும் பொறித்த விளக்குகள் ஒளிரவில்லை. அவருண்டு, அவர் காரியம் உண்டு என்று அடையாளம் காட்டுவார்கள். காரியம் உண்டு என்பதில் அழுத்தம் தருவார்கள். அதாவது அவரவர்க்கான செயல், பீற்றிக்கொள்ளாத செயல். வெளிச்சம் போட்டுக்காட்டிக்கொள்ளாத செயல் எனச் சொல்லிக் கொடுத்தனர். இதெல்லாம் அக்கம் பக்கத்தில் பார்த்த சாதாரண மனிதர்களுக்கான குணங்களாக தெரிய வந்தவை.

செய்யும் வேலைக்கு விளம்பரம் தேடாதே என இதற்குப் பொருள். அவர்களுக்கு கீதையின் அல்லது ஏதோவொரு மத புனித சாரத்தை முன்னோர்கள் ஒருவேளை சொல்லிக்கொடுத்திருக்கலாம். மனிதன் தனித்தனியே பிறந்து அவனவன் அபிலாசைகளுடன் வளர்ந்தாலும், அவனின் விருப்பங்கள் சமூக வாழ்க்கை முறையில் தான் ஈடேறுகின்றன. சமூகத்திற்கு அவரவர் வழியில் செய்வது என்பதும் தவிர்க்க முடியாதவை. எந்த சமூகமும் ஒரே கோரிக்கை, அல்லது ஒரே முகத்துடன் இருப்பதில்லை. அதற்கு வெவ்வேறு தேவைகள் இருக்கின்றன. அவற்றை நிறைவேற்ற வெவ்வேறு பயிற்சியும் திறமையும் தேவைப்படுகின்றன.

பணம் பிராதானம். பணமே எல்லாம் அல்ல என்கிற புரிதல் பலரிடம் இருந்தது. இப்போதும் இருக்கலாம். எதைக்கொண்டு வந்தோம் அதை எடுத்துச் செல்ல என்பது எல்லா காலத்திற்குமான பாடம்தான்.

சமூகத்திற்கு எது தேவை என ஒருவன் புரிந்து கொள்கிறானோ, எதை தன்னால் தரமுடியும் என நினைக்கிறானோ அதை அவன் தந்து செல்ல வேண்டிய கடமை உணரப்பட வேண்டியதாக உள்ளது. இந்த தேவை உணர்தல், தன்னால் தரப்படுதல் என்பது பல தரப்பட்டதாக இருக்கிறது. சமூகத்தில் இருக்கும் அனைவருக்கும் என நாம் பேசுவதெல்லாமே, அனைவருக்குமானதல்ல- அது எப்போதுமே ஒரு

பகுதியினருக்குத்தான். ஒரு பகுதியினருக்கு அவசியமானது, வேறொரு பகுதியினருக்கு அவசியமற்றதாகவும் இருக்கும். இப்போதெல்லாம் மனிதர்கள் வாட்ஸ் ஆப் குழுவினரே. அல்லது முகநூல் நண்பர்களே, இன்ஸ்டா பிரியர்களே. எந்த ஆகப்பெரிய மனிதரும், எந்த ஆகப் பெரிய செயலும் கூட அனைவருக்குமானதாக இருக்க முடிவதில்லை.

நான் செய்வது மட்டுமே சமூகச் சேவை என்கிற கொடியை பெரும் விளம்பர வெளிச்சத்திற்காக ஏற்றி, அதை அனைவரும் செய்ய வேண்டும் , கொண்டாட வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு முரண்களை உருவாக்குகிறது. அவரவர் செயலில் அவரவர்க்கான நிறைவு தவறில்லை, அவசியமானதும் கூட. செயல் ஒன்றெனில் நூறு போட்டோக்களின் காலமிது. ஒருமுறை செய்தால் நூறு முறை சொல்லனும் என்கிற காலமாக இருக்கிறது. செயலுக்கான போட்டோ என்பது கூட மாறி, போட்டோக்களுக்கான செயல் என உச்சம் போகும் நேரமிது.

எல்லா அர்த்தங்களும் மனிதார்த்தங்களே. அனர்த்தம் என நாம் சொல்வதும் மனிதார்த்தமே.

வாழ்வியல் காலந்தோறும் மாறக்கூடியது தான். கால மாற்றத்தில் சமூகம் தன் விழுமியங்களையும் மாற்றிக்கொள்ளும் போலும். சில விழுமியங்கள் உதிர்ந்து போகின்றன. கொண்டாட புதிய விழுமியங்கள் எழுந்து வருகின்றன… பொருந்தா மனிதர்கள் காலந்தோறும் இருக்கவே செய்கின்றனர். Out dated, misfit, selfish, alienated- alienation - அந்நியமாதல் என சமூகவியலாளர் இந்த குணப்பண்புகள் குறித்து கதைக்கலாம்.

23-12-2024

dec 23

ரயில்வே தொழிற்சங்க தேர்தல்

தெற்கு ரயில்வேயில் SRMU DREU ஆகிய இரு சங்கங்களும் அங்கீகாரம் பெற்றுள்ளன நல்வாழ்த்துகள். ரயில்வேயில் 2007ல் ரகசிய வாக்கெடுப்பு முறையில் அங்கீகார தேர்தல் விதிகள் வந்தன. டெலிகாமில் இவ்விதிகளையும் நாம் அப்போது சுட்டிக்காட்டிதான், ஒன்றுக்கு மேற்பட்ட சங்க அங்கீகாரம் என்பதை பெற்றோம்.

2007ன் படி அங்கீகாரம் 5 ஆண்டுகள். 2012ல் முடிவடிந்த நிலையில் அடுத்த தேர்தலை 2013ல் நடத்தினர். இப்போது டிசம்பர் 4-6, 2024ல் நடந்த தேர்தல் 2019லேயே நடைபெற்று இருக்க வேண்டும். லேபர் கோடு பிரச்சனையை நிர்வாகம் சுட்டிக்காட்டிக்கொண்டிருந்தது. நீதிமன்ற வழக்குகள் உருவாயின. நிர்வாகம் தேர்தலை நடத்த சம்மதித்தது. ரயில்வே 17 ஜோன்களில் இத்தேர்தல் நடைபெற்றுள்ளது. இன்னும் அதிகாரபூர்வமாக ரயில்வே வாரியம் அனைத்து வட்டார தேர்தல் முடிவுகளையும் தொகுத்து வெளியிடவில்லை. அது வந்த பின்னர்தான், வட்டாரவாரியாக ஒவ்வொரு சங்கமும் பெற்ற வாக்குகள், அனைத்திந்திய அளவில் தெரிய வரும்.

ரயில்வே போர்டு தேர்தலுக்கான கமிட்டியை நவம்பர் 2023ல் அமைத்தனர். 40 பதிவு செய்யப்பட்ட சங்கங்களிலிருந்து 350 ஆலோசனைகள் பெற்று அவர்கள் தேர்தல் விதிகளை இறுதிப்படுத்தி சுற்றுக்கு விட்டனர். பெரும்பான்மை சங்கங்கள் EVMs Electronic voting machine வழியே தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றனர். நிர்வாகம் இம்முறை சாத்தியமில்லை என அவர்களை வாக்குப்பெட்டி தேர்தலை ஏற்கச் செய்தனர். 2007 மற்றும் 2013 தேர்தல் அனுபவங்களை கணக்கில் கொண்டு செப்டம்பர் 2024ல் final modalities வெளியிட்டனர்.

இன்னொரு நடைமுறை என்னவென்றால், ஜோன் வாரியாக போட்டியிடும் சங்கங்கள் ரூ 50000 செக்யூரிட்டி டிபாசிட் கட்டவேண்டும். 5 சதம் கூட வாக்கு எடுக்காத சங்கங்கள் டெபாசிட் தொகை இழப்பர்.

zonal recognition என்கிற வகையில் தெற்கு ரயில்வே, வடக்கு ரயில்வே, மேற்கு , கிழக்கு ரயில்வே , மெட்ரோ உள்ளிட்ட 17 ஜோன்களில் தனித்தனி அங்கீகாரம் இருக்கும். இந்த தேர்தல் முடிவுகள் ஆங்காங்கே அறிவிக்கப்பட்டு ஜோன் வாரியாக அங்கீகாரம் தருவர்.

அங்கீகார விதிகள்

வாக்கெடுப்பு ரகசிய முறை

மொத்த வாக்காளரில் 30 சதம் அதற்கு மேல் பெறக்கூடிய சங்கங்கள் அங்கீகாரம் பெறுவர்.

ஒருவர் 30 சதம் பெற்று , மொத்த செல்லுபடி வாக்கில் 35 சதம் பெறும் வேறு சங்கம் இருக்குமாயின் அதுவும் அங்கீகாரம் பெறும்.

இரு சங்கங்கள் சமமாக வாக்குகள் பெற்று செல்லுபடி வாக்கில் 35 சதமும் எடுத்தால், குலுக்கல் முறையில் ஒரு சங்கம் மட்டும் அங்கீகாரம் பெறும்

மேற்கண்ட விதிகள் படி எவரும் இல்லை எனில் செல்லுபடி வாக்கில் 35 சதம் எடுக்கும் இரு சங்கங்கள் அங்கீகாரம் பெறுவர்.

இவை எதுவும் இல்லா நிலையில் செல்லுபடி வாக்கில் 20 சதம் பெற்று அதிக வாக்குகள் பெறுபவர் அங்கீகாரம் பெறுவர். இந்நிலையில் ஒரு சங்கம் மட்டுமே அங்கீகாரம் பெறும்.

செல்லுபடி வாக்கில் எவரும் 20 சதம் கூட பெறவில்லையெனில் அந்த வட்டாரத்தில் எவருக்கும் அங்கீகாரம் கிடையாது.

அங்கீகாரத்தை எழுத்துபூர்வமாக காரணங்களை சொல்லி நீக்கும் அதிகாரம் வட்டார பொதுமேலாளருக்கு உண்டு.

எந்த சங்கம் செல்லுபடி வாக்கில் 15 சதம் பெறுகிறதோ அவர்களுக்கு நோட்டீஸ் போர்ட், வாயில் கூட்டம் நடத்துதல் போன்ற சலுகைகள் தரப்படும்.

தேர்தல் கால நடத்தை விதிகள் உண்டு.

கடந்த தேர்தல் 2013ல் நடைபெற்றது. அதற்கு முன்னர் முதல் தேர்தல் 2007ல் நடந்தது. தெற்கு ரயிலேவில் சென்ற 2013 தேர்தலில் SRMU மொத்த வாக்களரில் 43.6 சதமும், செல்லுபடி வாக்கில் 46.8 சதமும் பெற்றது. SRES 23.3, 22.9 சதம் பெற்றது. DREU 23.7, 25.49 எடுத்தது. எனவே எஸ் ஆர் எம் யு மட்டுமே அங்கீகாரம் பெற்றது.

2024 டிசம்பர் தேர்தலில் தெற்கு ரயில்வேயில் மொத்த வாக்காளர் 76653, செல்லுபடி வாக்குகள் 68740 டி ஆர் இ யு பெற்றவை 26151 அதாவது 34.116 சதம் பெற்று அங்கீகாரம் பெற்றுள்ளது. அதே போல எஸ் ஆர் எம் யு 26258 வாக்குகள் அதாவது 34.26 சதம் பெற்று அங்கீகாரம் பெற்றுள்ளது.

மத்திய அமைப்புகளான AIRF NFIR rayilee வாரியத்தால் அங்கீகாரம் பெற வேண்டுமெனில் குறைந்தது 6 ஜோனலில் அங்கீகாரம் பெற வேண்டும். மொத்த செல்லுபடியான வாக்குகளில் 15 சதத்தையும்

பெறவேண்டும். 2013ல் 6க்கும் மேற்பட்ட ஜோன்களில் ஏ ஐ ஆர் எஃப் என் எஃப் ஐ ஆர் பெற்று, 15 சதத்திற்கு மேல் வாக்குகள் அகில இந்திய அளவில் பெற்று , ரயில்வே வாரிய அங்கீகாரத்தை அனைத்திந்திய அளவில் பெற்றன.

இம்முறையும் அவை வரலாம். முழுமையாக 17 ஜோன்களின் தொகுப்பு முடிவுகள் வந்தால் நாம் அதை அறியமுடியும்.

வெற்றி பெற்றவர்க்கு நல்வாழ்த்துகள்

23-12-2024

dec 23

தோழர் செல்வம் , பென்சனர் சங்கத்தலைவர் தோழர் DG பேசிய 8.51 நிமிட ஆடியோ ஒன்றை அனுப்பியிருந்தார். தோழர்கள் வேண்டுகோளுக்கேற்ப ஹிமாச்சல் தோழர்கள் 2019ல் பெற்ற சண்டிகர் மத்திய தீர்ப்பாயம் கொடுத்த தீர்ப்பு, ஹிமாச்சல் உயர்நீதி மன்றம், உச்சநீதிமன்றம் எடுத்த நிலைப்பாடுகளை DG அதில் விளக்கியுள்ளார்.

BDPA சங்கமும் இது குறித்த சிறு குறிப்பை போட்டுள்ளனர்.

பவானி தத் சர்மா மற்றும் 28 பேர் (ஆக 29) வழக்கில் சண்டிகர் தீர்ப்பாயம் 23-1-2019ல் கொடுத்த தீர்ப்பு நிலைத்துள்ளது. எதிர் மனுதாரர்களாக அதில் Secy DOT, BSNL CMD, CGM HP உள்ளனர்.

இத்தீர்ப்பு பென்சன் என்றால் மற்ற DCRG, Commuted Value, Leave Encashment என்கிற சேர்த்து (cover) செய்யவேண்டிய வாசிப்பை செய்துள்ளது. இது நல்ல அம்சம்

தீர்ப்பின் பாரா 11ல் சொல்லப்படும் வரிகளில் இது இடம் பெற்றுள்ளது

..the term ‘pension’ used in the decisions would cover the element of DCRG, Leave Encashment, Commuted value of pension as well and the applicants are held entitled to these revised dues on the basis of revised pay carried out by the respondents

இங்கு கவனிக்க வேண்டிய அம்சம் ..dues on the basis of revised pay.

அதாவது பென்சன் மற்றும் அத்துடன் ‘கவர்’ ஆகும் பலன்களைப் பெற PAY என்கிற ஒன்று நிர்ணயிக்கப்பட்டு இருக்க வேண்டும் என்பதும் நாம் சேர்த்து வாசித்துக்கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

இன்னொரு நல்ல வாசிப்பை இத்தீர்ப்பு ஹெட் ராம் என்கிற வழக்கை சுட்டிக்காட்டி செய்துள்ளது.

…pension is to be calculated not on the basis the amount actually received by an incumbent in the last month of his service, but on the basis of pay , as fixed for the last month of service. That alone is the interpretation, purposive, proper and reasonable, in the matter of fixation of pension.

இந்த வாசிப்பிலும் fixation of pension on the basis of pay fixed என்பதைக் காண்கிறோம். இந்த தீர்ப்பு pension fixation is linked pay fixation என்கிற வாசிப்பையே தருவதைக் காண்கிறோம்.

23-12-2024 17 hrs - R . Pattabiraman

dec 24

India After Gandhi ல் ராமச்சந்திர குஹா எழுப்பும் மிக முக்கிய கேள்வி- 1947 ஆகஸ்ட்டிற்கு பிறகு இந்தியாவிற்கு வரலாறு என ஒன்றுமில்லையா..

பண்டைய இந்தியா- அரசுருவாக்கம்- மதங்களின் தோற்றம் செல்வாக்கு- அரசர் வாழ்க்கை போர்கள்- நில விஸ்தரிப்பு- முகலாயர் ஆட்சி- கிழக்கிந்திய கம்பெனி- பிரிட்டிஷ் ஆட்சி- விடுதலை எழுச்சிகள்- காங்கிரஸ் உருவாக்கம்- தலைவர்கள் பங்களிப்பு, போராட்டங்கள்- விடுதலை பெறுதல் என்பதுடன் இந்திய வரலாறு முடிந்துவிட்டதா?

1947க்கு பின்னர் எழுதப்படுவதெல்லாம் வெறும் அரசியல் கட்டுரைகளா- பொலிட்டிகல் ஸயின்ஸ், சமூகவியல் மட்டும் தானா- வரலாறு என ஆய்வுப்பார்வையில் ஏதுமில்லையா- அரசர் இல்லை , பொது விடுதலை நோக்கமில்லை என்றால் வரலாறில்லையா என்கிற கேள்வியைத்தான் குஹா எழுப்பியதாக என் வாசிப்பு சொல்கிறது.

அய்ரோப்பாவின் பல நாடுகளை விட பெரிய மாநிலங்கள் இந்தியாவில் இருக்கு போது, இங்கிலாந்தின் வரலாறு, பிரான்சின் வரலாறு, ஜெர்மனி வரலாறு என ஆய்வு நூல்கள் ஏராளம் வரும் போது, இந்திய மாநிலங்கள்- அவற்றின் பூர்வீக சரித்திரம் மட்டுமல்லாமல், நவீன சரித்திரமும் தனித்தனியாக ஆய்வு கோணத்தில் எழுதப்படாத குறையை குஹா எழுப்புவது மிக முக்கியமான ஒன்றேயாகும்.

தமிழகம் என்றால் நீதி கட்சி தலைவர்கள், ராஜாஜி, காமராஜர், அயோத்திதாசர், எம் சி ராஜா, பெரியார், அண்ணா, பக்த வச்சலம், சி சுப்பிரமணியம், கருணாநிதி, எம்ஜிஆர், ஜெயலலிதா, இன்னும் எடப்பாடி, ஸ்டாலின் வரை- இன்னும் விடுபட்டுப்போன பெரும் ஆளுமைகள் குறித்த முழுமையான முடிந்தவரை ஆய்வு மனத்துடன் , குறைவான bias உடன் definite political biography இல்லாத குறையை குஹா எண்ணுவது போல் நினைக்க வேண்டியுள்ளது. இப்படி பல்வேறு மாநிலம் சார்ந்த, அகில இந்திய அளவிலான பங்களிப்பு செய்தவர்கள் குறித்த பதிவுகள் அவசியமாகின்றன. பல இந்தியத் தலைவர்களின் பிறந்த தேதி கூட குழப்பமாகி, அதிகாரபூர்வ official date of birth என ஒன்றை கொண்டாடிவருகிறோம்.

Hagiography என்கிற புகழ் பாடல் பூத்தூவல் இல்லாமல், placing facts என்கிற வகையில் நவீன ஆளுமைகளின் வரலாறு சொல்லப்பட்டால் நலம். அவர்களின் பீடம் சரிந்து விடுமோ என அபிமானிகள் கவலைகொண்டு - சொல்வது , மறைப்பது என நிலை எடுக்கலாம்.

வரலாற்று ஆய்வாளர் எவரும் அப்படி ஒரு பார்வையை வைத்துக்கொள்ள முடியாது. சொன்னவை எழுதியவை , அறிந்தவர் தெரிந்தவர்களிடம் சொல்லியவை, செய்தவை - வேறுபாடுகள் வைத்த விமர்சனங்கள், பெற்ற விமர்சனங்கள், சொல்லியவைக்கும் நடந்து காட்டியதற்குமான இடைவெளிகள் என அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய சமூகத்தேவை இருக்கிறது.

ஆட்சிக்கு வந்தவர் உருவாக்கிய திட்டங்கள் அமுலாக்கம், பயனாளிகள் விவரம், எப்பகுதியினருக்கு அவர் ஆட்சியில் எந்த அளவு முன்னேற்றம் என்பதெல்லாம் ஆய்ந்திட independent studies அவசியமாகிறது. பெரும் சாதனைகளும் அப்பட்டமான தோல்விகளும் சேர்த்தே முன் வைக்கப்பட வேண்டிய அவசியமுள்ளது. இதில் அரசியல் கணக்குகள், சௌகரியங்கள் பார்த்து மூடுவது வரலாற்று ஆய்வாளர்க்கு அழகல்ல. அபிமானிகள் எழுதும் hagiography அல்ல, ஒருவர் குறித்த வரலாற்று மதிப்பிடல்கள்.

காங்கிரஸ் இயக்கம், கம்யூனிஸ்ட் இயக்கம், திராவிட இயக்கம், பட்டியல் இன மக்கள் இயக்கம், தமிழ் தேசியம், இலக்கிய இயக்கம், சாதி மேலாதிக்கம்- போராட்டங்கள், மத இயக்கங்கள் , நில பிரபுக்கள், பெரு முதலாளிகள், சினிமா இன்னும் சமூக தாக்கங்களை உருவாக்கும் எதுவானாலும்- அதன் தலைவர்கள் , வழிநடத்தியவர், பங்களிப்புகள்- வெற்றி தோல்விகள் என தமிழ் சமூகம் தன் பதிவுகளை உருவாக்கிக்கொள்ள வேண்டும். தமிழ் சமூகத்தில் விடுதலைக்கு பின்னரான ஒவ்வொரு பத்தாண்டிலும் பயனாளிகள் எவர் எந்த வகுப்பார் என்கிற graph சமூக பொது வெளியில் பகிரங்கமாக வைக்கப்படவேண்டும். விடுதலைக்கு முன்னரான காலத்துடன் இது ஒப்பிடப்படவேண்டும்.

குறைந்தது 50 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து இயங்கு வெளிகளை கொண்டிருக்கிற எந்த இயக்கம் குறித்தும் தீவிர வாசிப்பு உருவாக்கப்படல் வேண்டும். 50 ஆண்டுகள் என்பது பெருங்காலம் தான்.

நம் சமூகத்தை பகுத்தறிவு அறிவியல் பார்வை கொண்ட சமூகமாக மாற்ற வேண்டுமானால் பெரும் டேட்டாக்கள் வழியான ஆய்வுகளை உருவாக்க வேண்டும். கோயில் வழிபாடு பெருகிவரும் கூட்டம்- ஆகும் செலவு(அனைத்து மதம் சார்ந்து), dependability of priesthood for rituals its growth and expenditure, அரசியல் கூட்டங்கள் ஆகும் செலவுகள், கல்விக் கூடங்கள் செலவுகள், சினிமா கூடங்கள்- ஒடிடி செலவுகள்,

மதுக்கூடங்கள் செலவுகள் என இன்னும் எவ்வளவிற்கோ டேட்டா கிராப் , நம் சமூகத்திற்கு தேவைப்படுகிறது.

தமிழர்களின் productive hours , non productive hours, entertainment- பொழுதுபோக்கு நேரம் என அவரவர் தன்னைத்தானே அளந்து உணரும் போது, நாம் செல்ல வேண்டிய தூரம் புலப்படும். என் நண்பன் நமரி ஒருமுறை வேடிக்கையாகச் சொன்னான் some are more active but sitting, some others are sitting but active என்று.

எதை நம் சமூகம் active என நினைக்கிறது என்பதில் ஒத்த கருத்தை எட்டமுடியாது. ஒருவர் கோயிலுக்கு/ வழிபாட்டு தலங்களுக்கு போவதை ஆக்டிவ் என நினைக்கலாம். வேறு ஒருவர் சினிமா சார்ந்து அல்லது அரசியல் சார்ந்து, கலை சார்ந்து இயங்கலாம். சிலர் ஆர்ப்பாட்டங்கள் கூட்ட பங்கேற்புகளே ஆக்டிவ் எனக் கருதுவர். அவரவர் ஆரோக்கியமாக , மனித பண்பாடு நேயத்துடன் , தன்னையும் பிறரையும் ஏமாற்றாமல் காட்டும் எந்த வேலை ஈடுபாடும் அவரை ஆக்டிவ் ஆக்குகின்றன என எடுத்துக்கொள்ளலாம்.

குஹா இன்று சிந்தனை கிளறலை செய்தார். அவருக்கும் அவரின் India After Gandhi Revised and Updated நூலுக்கும் என் வணக்கம்.

24-12-2024

dec 25

அனன்யா வாஜ்பேய் எழுதிய Righteous Republic மனதை ரம்மியமாக அழைத்துச்செல்லும் உரையாடல் நிறைந்த புத்தகம். Self sovereigntyக்குமான உறவை அற்புதமாக நகர்த்தும் உரையாடல்.

இந்தியாவிற்கான மரபு ஏதாவது இருக்கிறதா ? மேற்கிற்கு மரபு என கிரேக்க ரோம் குறித்து துவங்குவது போல் இதை எங்கிருந்து.. 5 ஆளுமைகளின் சில முக்கிய எழுத்துக்களிலிருந்து இந்தியா எப்படி தன்னை அறம் சார்ந்த விழுமியங்களுடன் தகவமைத்துக்கொள்ள போராடி வருகிறது என்கிற உரையாடலை அழகாக நகர்த்தும் புத்தகமிது. காந்தி, நேரு, தாகூர், அம்பேத்கர் இவர்களுடன் தாகூரின் உறவினரான பெரும் ஓவியர் அபநிந்தரநாத்தையும் முன்வைத்து இந்த உரையாடல்களை அனன்யா கட்டியுள்ளார்.

அவசரமின்றி நிதானமாக படிக்கும்போது ஏராள கேள்விகளும் திறப்புகளும் அவரவர் வாசிப்பு அனுபவத்தில் உருவாகலாம். இந்தியாவிற்கான மரபு எது எனத்தேடிச் செல்லும்போது, அந்த மரபு விடுதலைப்போராட்டக்காலத்தில் எப்படிப்பட்ட மறுகட்டுமானமாக எழுந்திட முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்பதையும் இந்த புத்தகம் தர முயற்சிக்கிறது. கீழ்கண்ட பாரா இதை உணர்த்தலாம்.

The tradition, of moral and political reflection broadly construed, has, in effect, been reconstituted. It is a remarkable new tradition that India produces because while India is in the process of becoming a modern democracy, her founders reject the violence of the nation state form (Gandhi), reject nationalism as an ideology (Tagore) , transforming a non modern and sectarian history into an enabling precursor for secular democratic modernity (Nehru), and shift the bases of human happiness from the pursuit of individual interest to the alleviation of social suffering (Ambedkar)

இன்னொரு பாரா அவர்கள் நோக்கமும் வேலையும் என்னவாக எதை நோக்கி இருந்தன எனக்காட்டும்.

It should be clarified that the founders were not nostalgic revivalists. They did not waste time extolling the glories and virtues of the religion, culture, or philosophy of pre modern India, because their concern was with the present and the future, not with the past as such

அனன்யா சொல்கிறார் தான் சொல்லும் கதை எப்படி இந்தியா தன் சுயத்தை இந்த founders தணியா தாகத்தால் பார்த்துக்கொள்ள விழைந்தது..அதாவது find her way back to self recognition, self possession, self mastery and self realisation..

சிந்தனைக்கு மிக இதமான நம்மை மிக நிதானப்படுத்தி அழைத்துச் செல்லும் புத்தகமாக எனக்கு தோன்றுகிறது. தமிழில் வந்துள்ளதா தெரியவில்லை..

25-12-2022

dec 25

நெஞ்சுக்கு நீதி

கலைஞர் அவர்களின் ஆக்கங்கள் பலவற்றை தமிழ் மின் நூலகத்தில் ஏற்றியுள்ளனர். ஆர்வம் உள்ளவர் பார்க்க முடியும்.

அமெரிக்க கல்லூரி மாணவர் மத்தியில் அவர் எதிர்கட்சித் தலைவராக ஆற்றிய உரையை 'வரலாற்றுச் சுவடு' என அப்போது கொண்டு வந்துள்ளனர். விடுதலை வரலாறு, ஆர்யர் திராவிடர்- நீதிக்கட்சி, இட ஒதுக்கீடு என -மாணவர் மத்தியில் நல்ல எழுச்சி தமிழில் கலைஞர் அவர்கள் உரையாற்றியிருப்பதை, அந்த சிறு நூலை படிப்பவர் உணரலாம்.

எம்ஜிஆர் அவர்கள் இட ஒதுக்கீட்டில் பொருளாதார உச்சவரம்பு ரூ 9000 என சொன்ன நேரமது. அதை கலைஞர் கடுமையாக எதிர்த்தும் விலக்கிக்கொள்ளும்படியும் பேசினார். இந்த வரலாற்றுச் சுவடு இணைப்பில் உடன் பிறப்பே என விளித்து எழுதப்பட்ட கடிதம் ஒன்றும் இருக்கும். 'இன்றைய தமிழகம் குமுறும் எரிமலை' என அதன் தலைப்பு. அதில் கலைஞர் அவர்கள்

நாம் கூறும் ஆலோசனை என்ன ? எனக்கேட்டு இவ்வாறு ஆலோசனையை சொல்லியிருப்பார்

” ஏழை பணக்காரர் என்ற பாகுபாட்டை பிற்படுத்தப்பட்டவர்க்கு என்று இருக்கிற 31 சத விகிதத்தில் செய்யாதீர்கள். எல்லோரும் போட்டியிடக்கூடிய 51 சதவீதத்தில், பிராமணர், பிள்ளைமார், முதலியார், செட்டியார், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் போன்ற எல்லா சாதியிலும் உள்ள ஏழைகளுக்கு 15 சதம் தனியாக ஒதுக்கிடுங்கள்”

II

கலைஞர் கருணாநிதி அவர்கள் எழுதிய 'நெஞ்சுக்கு நீதி' முதல் வால்யூமை படித்து முடித்தபோது, அவர் நடைமுறை அரசியலில் மட்டுமல்லாது , விரிவான எழுத்து அரசியலிலும் வீச்சு நிறைந்தவர் என உணர்ந்தேன். ஏராள அரசியல் நிகழ்வுகளுடன் அவரது சுயசரிதை இதில் பின்னப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் தினமணி கதிரில் தொடராகவும். பின்னர் முதல் வால்யூமின் இரண்டாம் பகுதியை குங்குமத்திலும் அவர் எழுதியிருந்தார்.

பிறந்த திருக்குவளை, வாழ்ந்த திருவாரூர் நண்பர்கள், அரசியல், நாடகம், சினிமா, பெரியார், பின்னர் அண்ணா திமுக- எம் எல் ஏ ஆதல்,

திமுக அண்ணா ஆட்சி , மந்திரி ஆதல், அண்ணா மறைவு- முதல்வர் ஆதல் வரை இந்த முதல் வால்யூமில் 780 பக்கங்கள் அவர் விரிவான பதிவை தந்துள்ளார். பல ஆண்டுகளுக்கு பிறகு அவரின் அடுத்த அடுத்த தொகுப்புகள் வெளிவந்தன. ஆர்வம் மூட்டக்கூடிய வகையில் , தன் நிலை சார்ந்து திமுக அரசியல் நிலைப்பாடுகளை, பிற கட்சிகளை, நாடு- உலகம் முழுதுமான முக்கிய நிகழ்ச்சிகள் அது குறித்த தன் பார்வையை கலைஞர் நெஞ்சுக்கு நீதியில் வைத்துள்ளார். நெஞ்சுக்கு நீதீயில் காந்தியின் மேற்கோள்களை கலைஞர் ஆங்காங்கே காட்டுகிறார்.

தமிழக அரசியல் இலக்கியத்தில் 'நெஞ்சுக்கு நீதி' க்கு மிக முக்கிய இடமுண்டு என்றே என்னால் உணரமுடிகிறது. வாசிப்பவர் முழுமையாக ஏற்க வேண்டும் என்றில்லாவிட்டாலும், நவீன தமிழக/ இந்திய அரசியல் வரலாற்றிற்கு இந்நூல் முக்கிய பங்களிப்பு எனலாம்.

நெஞ்சுக்கு நீதி முதல் வால்யூம் இரு பகுதிகளிலிருந்தும் நான் கொத்திப்போடும் சில வரிகள். சில கருத்துக்கள் இன்றைய அரசியலுக்கும் பொருத்தமாக இருக்கலாம்.

நெஞ்சுக்கு நீதி வால்யூம் 1 பக் 256

கருத்து மாறுபாடுகள் ஒரு கட்சியின் நலனை முன்னிட்டு இருந்திட வேண்டும். அந்தக் கட்சியை வளர்ப்பது எப்படி என்ற பொதுநலத்தின் அடிப்படையில் அமைந்ததிடவேண்டும். கட்சிக்கு நாம் என்ன செய்தோம், இன்னும் என்ன செய்யவேண்டும் என்ற கேள்வியின் அடிப்படையில் கருத்து வேறுபாடுகள் எழுவது இயற்கை- அனுமதிக்கக்கூடியது. அதன் காரணமாக பிளவுகள் என்றுமே எழாது.

ஆனால் கட்சி தனக்கு என்ன செய்தது, தனக்கு கட்சி என்ன என்ன செய்யவேண்டும் என்ற தன்னல அடிப்படையில் எழுகின்ற கருத்து வேறுபாடு அனுமதிக்கத்தக்கதும் அல்ல, அது கட்சியை வளர்ப்பதற்குப் பயன்படக்கூடியதும் அல்ல.

பக் 260 எழுத்தாளர்களுக்கு அண்ணா சொன்னதாக

“ மாற்றாருக்கு எரிச்சல் உண்டாகும் என்று என்ணிக்கொண்டு நீ எழுதுகிறாய். அவர்களுக்கு எரிச்சல் வருகிறதோ இல்லையோ, நீ எரிச்சலை வரவழைத்துக்கொண்டு எழுதுகிறாய். இந்த எரிச்சல் மாற்றாரை அழிப்பதற்குப் பதிலாக உன்னையே வீழ்த்திவிடும்”

பக் 319 அண்ணா தந்த அறிவுரை

நம்மிடத்தில் இரண்டு சுபாவங்கள் கட்டாயமாக இருந்தாக வேண்டும். ஒன்று எவரிடத்திலும் விரோதம் கூடாது. நம்மீது வெறுப்பு காட்டுபவர்களிடம் கூட கழகத்தோழர்கள் அன்பு காட்டவேண்டும்,.

வெறுப்பு என்பது என்ன? தலைகீழான அன்பைத்தான் அப்படி சொல்கிறார்கள்..நம்மை வெறுப்பதன் மூலம் அவர்கள் தங்கள் மனதிற்கு சாந்தி தேடிக்கொள்கிறார்கள். அவ்வளவுதான். கழகத்தோழர்கள் எந்த அரசியல் கட்சிக்காரர்களிடமும் விரோதம் காட்டக்கூடாது.

பக் 325 அண்ணா சொன்னது

செப் 21 1957 திருவண்ணாமலை இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அண்ணா

எங்களுக்கு இந்த உலகத்தில் இரண்டு எஜமானர்கள் தாம் உண்டு. ஒன்று எங்கள் மனசாட்சி. மற்றது இந்நாட்டு மக்கள்.

பக் 374 சம்பத் அவர்களை அழைக்கும் அறிக்கையில் அண்ணா

ஒரு பெரிய அமைப்பிலே ஈடுபடும் போது நமக்கென்று தோன்றும் எண்ணங்கள் சரியானவை நியாயமானவை தேவையானவை என்று தோன்றினால் அந்த அமைப்பு அவைகளை ஏற்றுக்கொள்ள செய்வதற்கான முறையில் காரியமாற்றி வெற்றி காண்பதுதான் ஜனநாயகக் கடமை

வால்யூம் 1 பகுதி 2 லிருந்து

பக் 385ல் கலைஞர்

அறிஞர் அண்ணா எப்போதுமே கம்யூனிசத்திற்கு ஆதரவானவர். ஆனால் கம்யூனிஸ்ட்களை நம்பாதவர்; ஜனநாயகவாதிகளைப் போற்றுபவர். ஜனநாயகத்தின் குறைபாடுகளையும் குளறுபடிகளையும் நன்கு அறிந்தவர் ஜனநாயக முறையில் கம்யூனிசத்தின் பலன்களைச் சேர்ப்பதில்தான் அவருக்கு ஆர்வம் அதிகம். இந்த அடிப்படையில்தான் கழகத்தின் கொள்கைகளும் எங்களுடைய நடைமுறைகளும் இன்றளவும் இயங்கி வருகின்றன.

பக் 466 கலைஞர்

பொறுப்புள்ள கருத்துக்களை பொருத்தமான சொற்களில் பொறுப்போடு பேசவேண்டிய பொறுப்பு மிகுந்த இடமே சட்டமன்றம். உண்மையில் சமூக நீதிக் குழந்தையினை தாலாட்டிச் சீராட்டிடும் தாயகமே சட்டமன்றம்.

பக் 474 கலைஞர்

மக்களாட்சி நெறி என்பது ஒரு அழகு மிக்க மலர்த்தோட்டம், அதிலே எத்தனை விதமான கருத்துக்கள் வேண்டுமானாலும் எழில் வண்ண மலர்களாகப் பூத்துக்குலுங்கிடலாம்- புன்னகை சிந்தலாம். ஆனால் அங்கே ஒரே ஒரு மலர் தான் - கட்சி தான் சிரிக்கலாம், செழிக்கலாம் என்றால் அது உண்மையான ஜனநாயக உணர்வாகுமா?

பக்609 கலைஞர்

தம்முடைய தத்துவம் தழைத்திட கார்ல் மார்க்ஸ் வகுத்திட்ட வழி முறைகளிலே எனக்கு சில கருத்து மாறுபாடு இருந்தபோதிலும், ஏழைகளை வாழவைக்க என்ணிய அவர்தம் இலட்சியக் கருவிடமும், அதனை உரமிட்டு வளர்த்தே முதலாளித்துவ நாடுகளுக்கு அறைகூவல் விடுத்திடும் வகையில் சோவியத் நாட்டினை முன்னேற்றி விட்டாரே என்று ஸ்டாலினிடமும் எனக்கு அளவற்ற ஈடுபாடு உண்டு. அதன் காரணமாகவே என்னுடைய பிள்ளைகளில் ஒருவனுக்கு ஸ்டாலின் என்றே பெயர் சூட்டியும் உள்ளேன்.

ஒரு தத்துவத்தை மதிப்பது என்பது வேறு; அந்த தத்துவத்தின் செயல் முறையிலிருந்து செயல்படுத்துகிறவர்களிடமிருந்து மாறுபாடு கொள்வது என்பது வேறு. அந்தந்த மண் வளத்திற்கு ஏற்பவே பொதுவுடைமை பூங்கா மலர்ந்திட வேண்டும்.

10-12-2024

dec 25

கான்பூரில் 1925 டிசம்பரில் பிறந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி- CPI

தனது நூற்றாண்டில் நுழைகிறது.

சாதகமற்ற சவாலான அரசியல் சூழலில் தன் கொள்கை , தொண்டர்களின் பலத்தில் நிறை நம்பிக்கையுடன் அதன் பயணம் தொடர்கிறது. நல் வாழ்த்துகள்

மக்கள் அறிந்த -மக்களை அறிந்த தமிழகம் போற்றும் தலைவர் தோழர் ஆர் என் கே அவர்களின் நூற்றாண்டும் இணைகிறது. நலமும் ஆரோக்கியமும் பெருகட்டும். மூத்தவர்க்கு வணக்கம்.

dec 25

On the Eve of Centenary Year

BELGAUM Congress conference 1924- 100 years

பெல்காம் காங்கிரஸ் மாநாட்டின் நூற்றாண்டு

காந்தியடிகள் ஒரே ஒருமுறைதான் காங்கிரஸ் அமைப்பின் தலைவர் என்கிற பொறுப்பில் அமர்ந்தார். 1924 டிசம்பர் 25-27 நாட்களில் பெல்காமில் நடந்த மாநாட்டில்தான் அவர் காங்கிரஸ் தலைவராக தலைமையுரையை டிசம்பர் 26 அன்று ஆற்றினார். முன்னரான டிசம்பர் 25 அன்று அவர் பொருளாய்வுக்குழுவில் உரையை தந்திருந்தார். டிசம்பர் 27ல் நிறைவுரையாற்றினார்.

1924 டிசம்பர் 25, 26, 27, 28 மற்றும் 30 ஆகிய நாட்களில் காந்தியடிகளின் உரையை மட்டும் தனியாக தொகுத்து இங்கு தந்துள்ளேன். காந்தியடிகள் நூல் தொகுப்பு 25 லிருந்து 63 பக்க அளவிலான, இந்த ஆங்கிலத் தொகுப்பு தரப்பட்டுள்ளது.

டிசம்பர் 25 அன்று மாநாட்டிற்கு இப்படி ஊதாரித்தனமாக செலவு செய்யலாமா என் கடிந்து, சார்பாளர் வசதி கட்டணம் மீதான கரிசனத்தை அவர் வெளிப்படுத்தினார். பின்னர் பொருளாய்வுக்குழுவில் அவர் உரை நிகழ்த்தினார். இந்த இரண்டும் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

டிசம்பர் 26 அன்று தலைமையுரையை மிக கூர்மையாக- பிரச்சனைகள் அடிப்படையில் அவர் நல்கினார். நான் கவனித்த சில அம்சங்களை இங்கு தந்துள்ளேன். உரையை படிப்போர் இவை ஒவ்வொன்றின் மீதும் அவரது பார்வை எப்படி இருந்தது என உணரமுடியும்

இந்து முஸ்லீம் ஒற்றுமை

தீண்டாமை ஒழிப்பு

எந்திரங்கள்

நூற்பின் அவசியம்

சுயராஜ்யம்- 12 அம்சங்கள்

உடல் உழைப்பின் அவசியம்

சீர்திருத்த இயக்கம் மட்டுமல்ல காங்கிரஸ்

தேசிய பள்ளிகள்

ஒத்துழையாமையால் வேலையிழந்தோர் அலவன்ஸ்

போதை பழக்க கொடுமை

வங்க ஒடுக்குமுறை

எனது நம்பிக்கை

அடுத்து காந்தியடிகள் இரங்கல் தீர்மானத்தில் உரையாற்றினார்

டிசம்பர் 26ல் 'காந்தி- மோதிலால், தாஸ் உடன்பாடு' , உறுப்பினராக நூற்பின் அவசியம் குறித்த உரை

மேற்கண்ட டிசம்பர் 26 உரைகள் இத்தொகுப்பில் இணைக்கப்பட்டுள்ளன.

டிசம்பர் 27ல் தீண்டாமை ஒழிப்பு தீர்மானத்தில் காந்தி உரையாற்றுகிறார். அன்னி பெசண்ட் அறிக்கை மீது கருத்து சொல்கிறார்.

தேசிய கல்வி நிறுவனங்கள், காங்கிரஸ் அமைப்பு விதிகளில் மாற்றம், அபின் அரசாங்க கொள்கை, காங்கிரஸ் நிர்வாகிகள் ஆகியவை குறித்த தீர்மானங்களை காந்தி முன்வைக்கிறார்.

பின்னர் காந்தியடிகள் பெல்காம் மாநாட்டின் நிறைவுரையை தந்தார்.

பெல்காமில் காங்கிரஸ் மாநாடு ஒட்டி நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்று டிசம்பர் 27ல் உரை நல்கினார். மேற்கூறிய டிசம்பர் 27ன் உரைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

டிசம்பர் 28ல் பசுவதை தடுப்பு மாநாட்டிலும் இந்து முஸ்லீம் ஒற்றுமையை சொல்லி உரை நல்கினார். டிசம்பர் 30ல் சமஸ்தானங்கள் மாநாட்டில் உரையாற்றினர். இந்த இரண்டும் இத்தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

பெல்காம் காங்கிரஸ் மாநாட்டின் நூற்றாண்டை காணும் வேளையில், இத்தொகுப்பு பயனுள்ளதாக இருக்கும் எனக் கருதுகிறேன். காந்தி வால்யூம் 25ல் முழுமையாக காணலாம்.

25-12-2024 - ஆர் . பட்டாபிராமன்

ஆர்வம் உள்ளவர் இணைப்பை சொடுக்கவும்

https://archive.org/details/centenary-of-1924-belgaum-conf

dec 26

இந்திய விடுதலை சட்டம் , பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இரு டொமீனியன்கள் இந்தியா- பாகிஸ்தான் உருவாக்கம் என்கிற முடிவு இறுதியானது.

சமஸ்தான மன்னர்கள் சிலரை தூபம் போட்டு தனி நாடுகஉடன் தொடர ஆசை கட்டும் சக்திகள் சற்று over time பார்த்தன. திருவாங்கூர் தனியாக நீடிக்க சர் சி பி ராமசாமி தலைகீழாக நின்று பார்த்தார். படேல், மேனன், மௌண்ட்பாட்டன் எவர் சொல்லியும் மசியாமல் தனி நாடு என்றார். ஜின்னா பாகிஸ்தான் உங்களுடன் உடன்பாடு போட்டுக்கொள்ளும் என்றார். பிரிட்டன் தனியாக மாங்கனீஸ் உடன்பாடு ஒன்றை போட்டிருந்தது. டெல்லியிருந்து ஊர் திரும்பிய திவான் சி பி யை சோசலிஸ்ட் ஒருவர் கொலை தாக்குதல் செய்தார். மருத்துவ சிகிட்சையில் இருந்த திவான், மன்னரை அழைத்து இந்தியாவுடன் இணைந்து விடலாம், இல்லையெனில் நிலைமை கட்டு மீறும் என்றாராம். சிலர் சோசலிசம் வேலை செய்துவிட்டது எனப் பேசிக்கொண்டனர்.

மற்றொரு முரண்டு போபால் நவாப் மூலம் வந்தது. அவர் மவுண்ட்பாட்டனின் நண்பர். சமஸ்தானங்களின் சங்கத் தலைவராக இருந்தவர். வைஸ்ராய்க்கு போலோ விளையாட்டு தோழர். காந்தி, நேரு மீது கடுஞ்சொற்களை வீசிக்கொண்டிருந்தவர். இந்தியாவுடன் சேர விருப்பமில்லை எனச் சொல்லி வந்தார். தனி நாடு என்றார். மௌண்ட்பாட்டனை சந்தித்து, நீங்கள் கூடவா 'சிவப்பு அபாயத்தை' அறியவில்லை என்றார். இவர் என்ன (நேருவை) ஜமீன் ஒழிப்பு என்கிறார், அக்கம் பக்கத்தில் கம்யூனிஸ்ட்களே தெரிகின்றனர். நீங்கள் போய்விட்டீர்கள் எனில் விரைவில் இந்தியா கம்யூனிஸ்ட் நாடாகிவிடும் ஆபத்து இருக்கிறது என்றார்.

பொறுமையாக மவுண்ட்பாட்டன் சாதுர்யமான பதிலைத் தந்தார். நவாம் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். பிரிட்டிஷ் இனி இருக்காது. இந்தியா பாகிஸ்தான் என்கிற ஆட்சிதான் இருக்கும். சமஸ்தான நில பிரபுக்கள், இந்திய ஆட்சியாளர்களுடன் சேர்ந்து ஒத்துழைத்தால் கம்யூனிசம் வராமல் தடுக்க முடியும். படேல் என்ன கம்யூனிசம் கொணரவா நிற்கிறார். படேல் தானே சமஸ்தான ஒருங்கிணைப்பை செய்து வருகிறார். சிவப்பு அபாயம் தடுக்க, நீங்கள் எல்லோரும்

இந்தியாவுடன் சேர்வதே நல்லது என்றார் மௌண்ட்பாட்டன். இவ்வித விளக்க கடிதம் ஜூலை 31, 1947ல் எழுதப்பட்டதாக குஹா சொல்கிறார்.

போபால் நவாபிற்காக பரிந்து மெண்ட்பாட்டன் படேலை அணுகினார். ஆகஸ்ட் 15 க்கு பின் 10 நாட்கள் அவகாசம் தரலாமா என்று. சாதுர்யமான படேல், ஆகஸ்ட் 14 அன்று நீங்கள் நவாபிடம் instrument of accessionக்கு கையொப்பம் பெற்று, உங்கள் லாக்கரில் 10 நாட்கள் வைத்திருந்து, பிறகு என்னிடம் ஒப்படையுங்கள்- ஆட்சேபணை இல்லை என்றார்.

ஹைதாராபாத் நிசாம் குறித்து வரலாற்றில் சுவையான தகவல்கள் உண்டு. விடுதலை காலத்தில் இருந்தவர் 7 ஆம் நிசாம். பெயர் கீர் உஸ்மான் அலி. 1946-47ல் உலக பெரும் பணக்கார பட்டியலில் இருந்தவர். Dress sense இல்லாமல் இருந்தவர். எளிய தோற்றத்துடன் தனது 1918 மாடல் காரில் போகக்கூடியவர். இந்தியாவுடனா சேரமுடியாது என்றவர். இதற்கு தூபம் போட அவருக்கு திவானாக மீர் லாயிக் அலி என பெரும் தனவந்தர். மக்கள் எழுச்சியை தடுக்க ரசாக்கர் எனும் தாக்குதல் அமைப்பு.

தனி ஹைதாராபாத், இல்லையேல் பாகிஸ்தானுடன் இதை அய் நா வரை கொண்டு செல்வோம் என்றனர். பிரிட்டிஷ் ராஜ குடும்பத்து வக்கீலை- சர் வால்டர் மான்க்டனை கோடிக் கணக்கில் செலவழித்து வாதாட கொணர்ந்தனர். படேல், மேனன், கே எம் முன்ஷி நெருக்குதல் அதிகமானது. போலந்தை ஜெர்மனியின் ஹிட்லர் தாக்குவது போல் பாசிஸ்ட்டாக படேல், நேரு நடப்பதாக வக்கீல் வால்டர் குற்றம் சாட்டினார். மௌண்பாட்டனும் 1948ல் விடை பெறவேண்டிய காலம் வந்தது. படேலுக்கு தடையில்லை என்ற நிலையில் இந்திய ராணுவம் செப் 13 1948ல் சென்றது.

இந்த விஷயம் சொல்ல வந்த காரணமே, வேறு தகவலை பகிர்ந்து கொள்ளவே. குஹா தரும் தகவல் அது. நிசாமிற்கு அம்பாசிடராக மாஸ்கோவா வாஷிங்டன்னா எங்கு விருப்பம் என்கிற offer கொடுக்கப்பட்டதாம்.அந்த முரட்டு அப்பாவி எளிய மன்னர் மனிதர் ‘ஹைதராபாத் ராஜபிரமுக்’ என்றாராம்.

இங்கும் தெலங்கான சிவப்பு அபாயம் என்கிற வரலாறு எழுதப்பட்டது தனிக்கதை

நன்றி India After Gandhi Guha

26-12-2024

dec 27

Salute to Dr Manmohan Singh

President Murmu said Singh was “one of those rare politicians who also straddled the worlds of academia and administration with equal ease”. “In his various roles in public offices, he made critical contributions to reforming the Indian economy. He will always be remembered for his service to the nation, his unblemished political life and his utmost humility. His passing is a great loss to all of us. I pay my respectful homage to one of the greatest sons of Bharat and convey my heartfelt condolences to his family, friends and admirers,” she said.

Prime Minister Modi said, “India mourns the loss of one of its most distinguished leaders, Dr. Manmohan Singh Ji. Rising from humble origins, he rose to become a respected economist. He served in various government positions as well, including as Finance Minister, leaving a strong imprint on our economic policy over the years. His interventions in Parliament were also insightful. As our Prime Minister, he made extensive efforts to improve people’s lives.”

Leader of Opposition in Lok Sabha Rahul Gandhi said Singh led India with immense wisdom and integrity. “His humility and deep understanding of economics inspired the nation. My heartfelt condolences to Mrs Kaur and the family. I have lost a mentor and guide. Millions of us who admired him will remember him with the utmost pride,” he said

Congress president Mallikarjun Kharge said that with the passing of Singh, India has lost a visionary statesman, a leader of unimpeachable integrity, and an economist of unparalleled stature.

“Undoubtedly, history shall judge you kindly, Dr. Manmohan Singh ji!,” Kharge posted on X.

INC

History will always remember Dr Manmohan Singh Ji for his dignified demeanor, commitment to public service, profound wisdom and humility. He leaves behind a legacy of economic reforms, political stability, and dedication to uplift the lives of every Indian.

His tenure first as a technocrat and then as India’s Prime Minister will be remembered for economic prosperity with focus on social welfare, and strengthening of India’s position on the world map. Known for his quiet but resilient leadership, he was a man of principle who made tough decisions with care, concern and a steadfast commitment to nothing but the country’s welfare above all else.

As a leader, Dr. Singh rarely sought the spotlight, yet his decisions resonated deeply across every facet of Indian society and beyond. The trust and respect he earned from political allies, adversaries, and world leaders alike is a testament to his profound impact.

A statesman, a scholar, a leader, a visionary - one of India’s proudest son - Farewell Sir, you will be deeply missed.

BJP national president JP Nadda said that the passing of Manmohan Singh is an immense loss for the nation. “A visionary statesman and a stalwart of Indian politics, throughout his remarkable career in public service, he consistently voiced for the welfare of the downtrodden. His leadership earned admiration and respect across party lines. Shri Manmohan Singh ji’s legacy will continue to inspire generations in their pursuit of nation-building,” Nadda said while extending his condolences to Singh’s family, friends, and admirers

Kerala Chief Minister Pinarayi Vijayan highlighted Singh’s dedication to secularism and democracy. “Deeply saddened by the passing of Dr Manmohan Singh ji, former Prime Minister of India and a distinguished statesman committed to the values of secularism and democracy,” he said.

Tamil Nadu Chief Minister M K Stalin hailed Singh for his intellect and leadership. “Deeply saddened by the passing of former Prime Minister Dr Manmohan Singh, a statesman whose intellect and leadership steered India’s economic transformation. His tenure marked an era of steady growth, social progress, and reforms that improved the lives of millions,” he said.

26-12-2024

dec 29

நவம்பர் 25, 1949ல் டாக்டர் அம்பேத்கர் அரசமைப்பு அசெம்பிளியில், அரசமைப்பு சட்ட ஷரத்துக்களை இறுதிப்படுத்தி ஆற்றிய உரை மிக முக்கியமானதாக பார்க்கப்படுகிறது. பலமுறை வாசிக்கப்பட வேண்டியதும் கூட. இனி குடியரசாகப் போகும் (ஜன 26, 1950) இந்தியாவின் எதிர்காலம் குறித்த கரிசனம், அவர் உணர்ந்த அளவிலான வழிகாட்டுதல் அவ்வுரையில் இருந்தது.

மூன்று மிக முக்கிய அம்சங்களை எதிர்கால இந்தியாவின் கவனத்திற்கு பாபாசாகேப் எடுத்து வைத்தார். ஒன்று போராட்டப் பாதை, அடுத்து தனிநபர் மீதான பக்தி பாவ வழிபாட்டுணர்வு, மூன்றாவது மிக முக்கியமானது இந்தியா போகவேண்டிய இலக்கான சமூக பொருளாதார ஜனநாயகம். அவ்வுரையை பலரும் படித்திருப்பர்.

இங்கு நான் குஹா தன் நூலான India After Gandhiல் Ideas of India அத்தியாயத்தில் அம்பேத்கர் உரையிலிருந்து கொடுத்த சில வரிகளை மட்டும் தருகிறேன்.

முதலில் போராட்டப்பாதை

குஹா தன் வரியாக சொல்வது There was no place for bloody revolution, of course, but in his view there was no room for Gandhian methods either. அதாவது புரட்சிகர போராட்டங்களுக்கோ ஏன் காந்திய வழி போராட்டங்களுக்கோ இடமில்லை என்பது.

குஹா எடுத்தாண்டுள்ள அம்பேத்கரின் வரிகள்

“ we must abandon the method of civil disobedience, non cooperation and satyagraha. Under an autocratic regime, there must be some justification for them, but not now, when constitutional methods of redress were available.. satyagraha and the like were nothing but the grammar of anarchy and sooner they are abandoned, the better for us”

இரண்டாவது கதாநாயக துதி குறித்து.. குஹா தரும் அம்பேத்கர் வரிகள். மதத்தில் வேண்டுமானால் ஆன்மாவின் கடைத்தேற்றத்திற்கு பக்தி வழியாகலாம். ஆனால் அரசியலில் அது சர்வாதிகாரத்திற்கு இட்டுச் செல்லும்.

..”Bhakti in religion may be the road to the salvation of a soul. But in politics, Bhakti or hero worship is a sure road to degradation and to eventual dictatorship “

மூன்றாவது மிக முக்கியமானது இந்தியாவிற்கு தேவையான சமூக பொருளாதார ஜனநாயகம். குஹா எடுத்தாண்டுள்ள அம்பேத்கர் வரிகள்

In politics we will be recognising the principle of one man and one vote and one vote one value. In our social and economic life , we shall, by reason of our social and economic structure, continue to deny the principle of one man and one value. How long we continue to live this life of contradictions? How long we continue to deny equality in our social and economic life? If we continue to deny it for long, we will do so only by putting our political democracy in peril?

இந்த மூன்றாவது அம்சம், எச்சரிக்கை, அல்லது தேவை உணர்தல் அனைத்து அரசியல் கட்சிகளிடத்து பெரும் விவாதப் பொருளாகவும், நாடாளுமன்ற விவாதப் பொருளாகவும், consensus அடிப்படையில் அதற்கான road map உருவாக்கமாகவும், இந்த 75 ஆண்டுகளில் ஆகியிருக்கவேண்டும். ஆகியிருந்தால், அம்பேத்கர் கருத்தியியலின் உயிர் அம்சம் என்பதை இந்திய அரசியல், சமூகம் எடுத்துக்கொண்டுவிட்டது என நாம் உணர்ந்திருக்கலாம். அதற்கான பொருளாதார கட்டுமானத்தையும் உணர்ந்திருக்கலாம். ஆனால் அப்படி ஏதும் நடைபெற்றதாக உணரமுடியவில்லை. சில முன்னேற்றங்களை எவரும் மறுப்பதற்கில்லை.

முதல் இரண்டு அம்சங்களில் கூட ஒருவர் மாறுபடக்கூடும். காந்தி மீதான bias என்கிற வாசிப்பை பெறமுடியும். கதாநாயக வழிபாடு என்கிற அம்சம் இன்று காந்தியிடமிருந்து வெகுதூரம் நகர்ந்து வேறு தலைவர்களுக்காகிவிட்டது. அம்பேத்கரும் அப்படி இன்று ஆக்கப்பட்டுள்ளதைக் காணமுடியும். பல்வேறு கட்சிகளில் இது தான் நிலை. கட்சித்தலைவர் என்றால் அவர் வரி இறுதியானது. விவாதங்களுக்கு அப்பாற்பட்டது என்ற நிலைதான்.

அதே போல், constitutional means இருப்பதால் போராட்டம் என்பது அராஜகம் என எந்த இயக்கங்களும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. அரசமைப்பை அம்சங்களை காக்க என்று கூட போராட்டங்கள் நடந்து வருகின்றன. அரசமைப்பு சட்டம் இருக்கிறது எனவே போராட மாட்டோம் என எந்த அமைப்பும் சொல்ல முடியாத சூழல்தான் நிலவுகிறது.

காந்தியானாலும், மார்க்ஸ் ஆனாலும் அம்பேத்கர் மற்றும் பெரியார், சாவர்க்கர் என எவரே ஆனாலும் அவர்களின் கருத்தியல் எந்த அம்சங்களில் ஏற்பு அல்லது எவை தள்ளக்கூடியது என்கிற விவாதம் இந்திய அரசியல் வெளிகளில் கூர்மையாக்கப்பட வேண்டிய அவசியம்

இருக்கிறது. இவர்களை வெறும் அடையாள அரசியல் பிம்ப வழிபாடாக மாற்றாமல், உயர் விவாத வெளிக்கு எடுத்துச் செல்லும் ஆரோக்கிய ஜனநாயக பண்புகள் தேவைப்படுகிறது.

எவர் தியாகத்தையையும் கொச்சைப் படுத்தாமல் அவர்களின் கருத்தியல் அம்சங்களின் செல்லுபடி தன்மை குறித்த நேர்மையான விவாதங்கள் பெருக வேண்டிய அவசியமுள்ளது. அவ்வழி இந்தியாவையும் இந்தியர்களையும் உயர்த்தும். உலகில் வேறு பல நாடுகளுக்கு இல்லாத பெரும் விவாத வெளியை , விடுதலைக்கால இந்திய அரசியலும், அதன் தொடர்ச்சியும் பேசப்பட்ட கோட்பாடுகளும் நமக்கு கொடுத்துள்ளன.

வக்கரிப்பின்றி, வெறுப்பின்றி, முத்திரை குத்திக்கொள்வதில் போட்டியின்றி வளர்க்கப்பட வேண்டிய அரசியல் சூழல் உணரப்பட வேண்டும். மறைந்த டாக்டர் மன்மோகன் சிங் குறித்த அஞ்சலி விவாதங்கள் இதை நன்கு உணர்த்துவதாக தோன்றுகிறது.

29-12-2024

dec 29

கடந்த 30 நாட்களுக்கு மேலாக உண்ணா போராட்டம் மேற்கொண்டுள்ள திரு ஜக்ஜித் சிங் டல்லேவால் குறித்த பத்திரிகை செய்திகள் அவ்வப்போது வந்து வண்ணமுள்ளன. விவசாயிகளின் முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து (எம் எஸ் பி உள்ளிட்ட பேச்சுவார்த்தை தீர்வு) அவரது பட்டினிப்போர் நவம்பர் 26ல் தொடங்கியது.

நீதி மன்ற கவனத்தையும் இப்போராட்டம் பெற்றுள்ளது. டல்லேவால் மற்றும் உடன் நிற்கும் விவசாய போராட்டத்தினர் ஒப்புதலின்றி, அவரை மருத்துவ மனைக்கு அழைத்து செல்ல முடியவில்லை என பஞ்சாப் அரசு சொல்லும் செய்தியும் இந்து வில் வந்துள்ளது.

மத்திய அரசு போராட்ட பிரதிநிதிகளை அழைத்து தங்களால் என்ன செய்ய இயலும் என்பதை நேர்மையாக சொல்வது நலமளிக்கும். போராட்டமும் தீர்வும் உயிர்பலிகளை காவு கேட்பது, வளர்ந்து வரும் சமூகத்தின் ஆரோக்கியத்தைக் காட்டாது. டல்லேவால் உடல் நிலை பாதிப்பு என்பதற்கு முன்னர் தீர்வு எட்டப்படுவது அவரை காக்கும்.

29-12-2024

Dec 30 2024

வரலாற்றில் கிடைக்கும் செய்திகள் விசித்திரமானதாகவும் ஆகின்றன. நேற்றைய சிந்தை சிதறல்கள், இன்றைய அரசியல் சௌகரியங்களுக்கு பொருந்தாமல் கூட போகும். சில பொருந்தவும் செய்யும். காலத்தேவைகள் மாறிக்கொண்டேயிருக்கின்றன. அரசியலில் மட்டுமல்ல, வாழ்வின் ஓட்டங்களும் மாற்றங்களைக் கொடுத்துக்கொண்டேயிருக்கின்றன.

எவர் வாழ்வும் அல்லது எந்த அமைப்பின் வாழ்வும் தன் கம்பீர பக்கங்களை மட்டுமே காண விழையும். நேற்று அப்படி இருந்தாயே, இன்று ஏன் என எவரையும் கேட்டுவிடமுடியாது. முற்றிலுமான அறுபடா தொடர்ச்சி என்பது இருக்காது. அப்படி ஒவ்வொருவரும் காட்சிபடுத்தும் முயற்சி இருக்கலாம். வாழ்க்கை அப்படி அறுபடா தொடர்ச்சி என நேர்க்கோட்டு பாதையை பொதுவாக காட்டுவதில்லை. Consistency என்பதை பல பெரும் ஆளுமைகள் ஏற்பதில்லை. பிறந்தவுடன் அது வருவதும் இல்லை. மெல்ல மெல்ல வாழ்க்கையின் சூழலில் தான் consistency ஏறுகிறது- அல்லது இல்லாமல் மாற்றம் பெறுகிறது. எதிர்வினை ஆற்றுவது என்பது கூட அனைத்துக்குமாக இருப்பதில்லை.

குஹாவை படித்துக்கொண்டிருந்த போது நேரு இருந்து தலைமை தாங்கிய காங்கிரஸ் குறித்து டாக்டர் அம்பேத்கர் கூறியதையும், சோவியத்தின் பிராவ்தா குறிப்பிட்டதையும் காண நேர்ந்ததால், இந்த consistency குறித்த சிந்தனை சிதறல் எழுந்தது.

முதலில் டாக்டர் அம்பேத்கர் எழுதிய மதிப்பீட்டைக் காணலாம். அவர் விலகுவதற்கு முன்னர் 4 ஆண்டுகள், காங்கிரஸ் தலைவர்களுடன், நேருவுடன் தான் அவர் பயணிக்க வேண்டியிருந்தது. கருத்து வேறுபாடு வருகிற நேரத்தில் வேறு மதிப்பீடுகள் வந்து விடுகின்றன. ஏன் consistency இல்லை எனக் கேட்க முடியாது. அவரின் அந்த மதிப்பீட்டை வைத்துக்கொண்டும், இன்றைக்கு அரசியல் கணக்குகளை ஏற்படுத்திக்கொள்ள முடியாது. ஏனெனில் இன்று காங்கிரசும் ஜெய் பாபு, ஜெய் பீம், ஜெய் சம்விதான் முழக்கத்தை வைத்துள்ளது.

டாக்டர் அம்பேத்கர் வரிகளாக குஹா சொல்வதை குஹாவின் வரிகளில்

Ambedkar had resigned from the office to revive the SCF in time for the election. In his speeches he sharply attacked the Congress government for doing little to uplift the lower castes. Freedom has meant no change for these peoples: it was the same old tyranny, the same old repression, the same old discrimination..

After freedom was won, said Ambedkar, the Congress had degenerated into a dharmsala or rest home , without any unity of purpose or principles and open to all, fools and knaves, friends and foes, communalists and secularists ,reformers and orthodox and capitalists and anti capitalists

நேருவோ அவரது ஆதரவாளர்களோ அல்லது காங்கிரஸ் சார்பிலோ இதற்கு என்ன எதிர்வினை தந்தார்கள் என குஹா எழுதாமல் இடைவெளியை உருவாக்கியுள்ளார் இந்நூலில். நேரு தலைமையில் காங்கிரஸ் 1952 தேர்தலில் பெரும் வெற்றியை பெற்றது வேறு கதை. மேற்கூறிய காங்கிரஸ் குறித்த அம்பேத்கர் அவர்களின் மதிப்பீட்டை, ஒருவேளை அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், எதிர்கட்சியாக இருப்பவர்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

மாஸ்கோ வானொலி, தாஷ்கண்ட் வழியாக இந்தியர் கேட்க தன் ஒலிபரப்பை செய்து கொண்டிருந்தது. அது சோவியத்தில் ஸ்டாலின் காலம். கம்யூனிஸ்ட் அல்லாத கட்சிகள் அனைத்தையும் பொது பிராக்கட்டில் மாஸ்கோ வானொலி அடைத்தது. அவர்கள் அமெரிக்க இங்கிலாந்து ஏகாதிபத்திய தாசர்கள் எடுபிடிகள் என்றது.

மாஸ்கோவிலிருந்து வந்த கம்யூனிஸ்ட் பிராவ்தா பத்திரிகையில் போர்சென்கோ என்பார் அக்டோபர் 25, 1951ல் Before the elections In India எனக் கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். அதில் வந்த சில வரிகளை வரலாற்றாய்வாளர் குஹா தனது The Biggest Gamble in the History அத்தியாயத்தில் தந்துள்ளார். போர்சென்கோ மதிப்பீடாக வரும் வரிகள்

The ruling Congress a government of landowners and monopolists, a government of national betrayers … the alternative for the long suffering , worn out Indian people is the Communist Party around which all progressive forces of the country, everyone who cherishes the vital interests of his fatherland , are grouping

காங்கிரசிற்கு மாற்று கம்யூனிஸ்ட் கட்சி என்கிற நம்பிக்கையை பிராவ்தா சொன்னதைக் காண்கிறோம். அனைத்தயும் மீறி காங்கிரஸ் நேரு மக்களிடம் விடுதலைக்கால பெரும் மதிப்புகளின் செல்வாக்கைப் பெற்று வெற்றி பெற்றனர்.

வரலாறு தன் சுருக்குப் பையில் யார் என்ன எப்போது பேசினார்கள் என முடிந்து வைத்துள்ளது. சுருக்குப்பை இல்லாதவரே இல்லை எனலாம். எல்லோருக்கும் வரலாற்று சுருக்குப்பை எதையாவது ஒன்றை எடுத்து வீச காத்துக்கொண்டேயிருக்கும். எனவே consistency உரிமை வாழ்க்கைப் பாதையில் எடுபடுவதில்லை

30-12-2024